ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

08-03-2006 - மலர் 02, இதழ் 29




பன்முக அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தயாரிப்பு - நவசீலன்

# தலைகளை நாடி வந்த உடல்கள்

ஒட்டக்கூத்தர் சிரச்சிங்காசனம் மீதேறிப் பத்மாசனமிட்டு அமர்ந்து, இரு கைகளையும் தலையின் மேல் கூப்பிச் சரஸ்வதி தேவியை வணங்கி, ஒரு கையில் கமண்டலம், ஒரு கையில் புத்தகம், ஒரு கையில் படிகமாலை ஏந்தி, ஒரு கையில் சின்முத்திரை தரித்து வெண்டாமரைப் புஷ்பாசனத்தில் எழுந்தருளி இருக்கும் பாவனையைத் தியானித்து, செங்குந்தர்களையும், அவர்கள் ஆயுதத்தையும் சுட்டி வர்ணித்து ஈட்டியெழுபது என்னும் பிரபந்தத்தைப் பாடி முடித்தார்.



பிரபந்த முடிவில் "கலைவாணி! பற்பல கவிகளையும் கற்றுணர்ந்து பாடவல்லவர்களான வித்வான்களைப் பரிபாலிப்பவரும் பிரம்மதேவருடைய நாவில் இருப்பவரும் நீ. கவிஞர்களின் நாவில் நீங்காமல் சதா காலமும் நீ வீற்றிருப்பதும் சாத்தியமல்லவா? துவாப்பா யுகத்தில் பாணாசுரனானவன் தன் மேல் படையெடுத்து வந்த துவாரகா வாசனாகிய ஸ்ரீகிருஷ்ணருடன் வில்லெடுத்துப் போருக்குப் போன சமயத்தில் அவர் சக்கராயுதத்தைப் பிரயோகித்துக் கண்டதுண்டமாக அவனைச் வெட்ட அவனுடைய தோள்கள் அறுபட்டுக் கும்பல் கும்பலாக விழுந்து போயும் நீ அவன் நாவில் எழுந்தளியிருந்த மகத்துவப் பலத்தினால் அல்லவா, அவ்வசுரன் உயிர் பிழைத்தான். இப்படியெல்லாம் மகிமை பெற்ற கருணாநிதியாக நீ இருப்பதனால் இங்கு தலைகளையும், உயிரையும் தடையின்றிக் கொடுத்த உதார குணமுடைய உத்தம வீரர்களாகிய இந்தச் செங்குந்தர்கள் எனக்குப் பழியும், பாவமும் நேராதபடி பெறுதற்கரிய உயிர் பெற்றெழுந்து அவர்களைக் குறித்து நான் பாடிய ஈட்டியெழுபது என்னும் பிரபந்தத்தைக் கேட்டுச் செவி களிக்கும்படி கிருபை செய்ய வேண்டும் என்னும் கருத்தில் ஒரு பாடலைப் பாடினார். அது பின்வருமாறு அமைந்தது.

"கலைவாணி நீயுலகில்
இருப்பதுவும்
கல்வியுணர் கவி
வல்லோரை
நிலையாகப்
பார்பதுமாவர் நாவில்
வாழ்வதுவு
நிசமேயன்றோ
சிலைவாணனாவிருந்தாயிரம்புயல்கள்
துணிந்துமுயர் சிவனுந்தான்
தலையாவி கொடுத்திடும்
செங்குந்தருயிர்
பெற்றிட நீ தயை செய்வாயே!"

ஒட்டக்கூத்தர் இந்தப் பாடலைச் சொல்லி முடித்த மாத்திரத்தில் வெட்டுண்டு விழுந்து கிடந்த தலைகளும், உடல்களும் காந்தமும் இரும்பும் போல ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டன.

காந்தத்திற்கு இரும்பை இழுக்கும் ஈர்ப்புச் சக்தியும், இரும்புக் காந்தத்தில் போய் ஒட்டும் சந்தான சக்தியும் இயல்பாக இருப்பதனால் அவையிரண்டும் ஒட்டுவதில் ஆச்சரியம் இல்லை. அப்படிப்பட்ட சக்தி இவற்றுக்கு இல்லை.

அப்படியிருந்தும் கண்ட கண்ட இடங்களில் தாறுமாறாகக் கிடந்த உடல்களெல்லாம் அதனதன் தலைகளைத் தேடி வரச் சோழராஜனின் ஆஸ்தான மண்டபத்திற்கு முன்பாகக் குவித்துக் கிடத்தப்படத் தலைகள் எல்லாம் தம் தம் உடல்களை நாடிச் சென்று வாணி கிருபையால் ஒட்டிக் கொண்டமையால் மாண்டவர்களெல்லாம் உயிர் பெற்றெழுந்து "ஜெயம், ஜெயம்" என்று ஆர்ப்பரித்தனர்.

(தொடரும்.....)

## ஏன்? எப்படி?

** மிக விரைவாக ஓடி விட்டு உடனடியாக நிற்கும் போது, உடம்பில் சருமமானது வெப்பமடைந்திருப்பதைப் போன்று சூடாக இருக்கும் ஏன் இவ்வாறு நிகழ்கின்றது.



விரைவாக ஓடுவதற்கு அதிகளவில் சக்தி உடம்பிற்குத் தேவைப்படுகின்றது. எனவே, உடம்பினுள் சக்தி பிறப்பாக்கலானது நடைபெறுகையில் உணவின் மூலம் கிடைக்கின்ற குளுக்கோஸ் தன்மையானது ஒட்சியேற்றப்பட்டு வெப்பமாகி அதன் ஒரு பகுதி உடம்பிலிருந்து வெளியேற்றப்படுகின்றது. இவ்வாறு வெளியேறுகின்ற வெப்பமானது தசைகளு கூடாகக் காணப்படுகின்ற இரத்த நாளங்களையும் கடந்து வருவதனால் நாளங்களில் செல்கின்ற குருதியும் இச்செயற்பாட்டினால் வெப்பமடைகின்றது. எனவே, இந்த வெப்பத்தின் தன்மையினாலே நமது உடலின் சருமம் வெப்பமடைந்திருக்கும் உணர்வினை நாம் அடைகின்றோம்.

** மின்சாரக் கம்பி வயர்களைப் பிளாஸ்ரிக்கிலான குழாய்களினூடாகச் செலுத்தியே வீடுகளிலோ, கட்டிடங்களிலோ 'வயரிங்' செய்யப்படுகின்றது. ஏன் இவ்வாறு பிளாஸ்ரிக் குழாய்கள் பயன்படுத்தப்படுகின்றன?



பலகை, இறப்பர், பிளாஸ்ரிக் ஆகியன மின்சாரத்தைக் கடத்துவதில்லை. எனினும், பலகையை வளைவு, நெளிவு கொண்ட இடங்களில் பயன்படுத்த முடியாது. ஆனால் பிளாஸ்ரிக்கிலான குழாய்கள் அப்படியல்ல! வளைத்து, நெளித்து எடுக்க முடியும். எனவேதான் மின்சாரத்தைக் கடத்தாத இவ்வாறான பிளாஸ்ரிக் குழாய்களைக் கொண்டு மின் ஒழுக்குகள் ஏற்படுவதனைத் தடுப்பதற்காக வயரிங் செய்யப்படுகின்றது.

விஜய்
விஜய்யின் இளம்
செய்தியாளர்களாக
தெரிவு
செய்யப்பட்டுள்ளோரின்
பெயர் விபரங்கள்
அடுத்த
இதழிலிருந்து
வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்மால் ஆளுமைமிக்கவர்களாக உருவாக முடியாதா?

''நாம் சிறந்த ஆளுமை மிக்கவர்களாகத் திகழ வேண்டும்'' என்று பலரும் நமக்கு உபதேசம் செய்வதை அடிக்கடி கேட்டிருக்கின்றோம். நமது ஆசிரியர்கள், மேடைகளில் பேசும் பேச்சாளர்கள், கட்டுரையாளர்கள்..... இப்படிப் பலரும் ஆளுமை பற்றிக் கூறுகின்றனர். அநேகமான சந்தர்ப்பங்களில் இவர்கள் கூறும் இந்த ஆளுமை பற்றிக் கேள்வி எழுந்தாலும் அதனைப் புரிந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை.

ஆளுமையென்றால் முதன் முதல் நம்முள் எழவேண்டிய உணர்வு, நாம் உயர்ந்த சிந்தனையுடையவர்களாக இருக்க வேண்டும் என்பதுதான். உயர்ந்த சிந்தனை என்றால் என்ன? என்ற கேள்விக்கான விளக்கமே மறுபுறத்தில் ஆளுமை என்றால் என்ன? என்ற கேள்விக்கான பதிலாகவும் அமையும்.

நம்மில் சிலரை நல்ல பிள்ளை என்றும், சிலரைக் 'கெட்டபிள்ளை' என்றும் சிலரை முரட்டுப் பிள்ளை என்றும், இப்படிப் பலவிதப் பெயர்களைச் சூட்டி அழைக்கின்றனர். நம்மில் சிலவித குணங்கள் மேலோங்கித் தீவிரமடைந்து தொடர்சியாக அக்குணங்கள் வெளிப்படுத்தப் படும்போது நம்மை அக்குணத்துக்குரியவர்களாகப் பிறர் இனம் காண்கிறார்கள். ஆகையால் வாழ்க்கைக்கும், நம் முன்னேற்றத்துக்கும் உதவாத அத்தகைய குணங்களை நாம் கட்டுப்படுத்த வேண்டியவர்களாகின்றோம்.

நாம் சிறந்த ஆளுமையுடையவர்களாக வளர்ச்சியடைய வேண்டுமானால் நம்முள் எழுகின்ற கோபம், பயம், பேராசை, பொறாமை, பழிவாங்கும் எண்ணம், தீயநோக்கம், வெறுப்புணர்வு, சகியாமை முதலான தீய பண்புகளைக் கட்டுப்படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும். இவற்றைக் கட்டுப்படுத்தும் அதே சமயத்தில் நற்பண்புகளான அன்பு, ஆதரவு, அரவணைப்பு, நம்பிக்கை, பற்றுறுதி, பிரார்த்தனை, இலட்சியம், ஆசை, முயற்சி, அனுதாபம், நன்னோக்கு முதலானவற்றை மேலோங்கச் செய்ய வேண்டும்.

பொதுவாக வாழ்வை மிகுந்த சாத்தியப்பாடுடையதாக்கி வெற்றி பெற வேண்டுமாயின் எதிலும் தீவிரத் தன்மையைக் கட்டுப்படுத்தி ஒரு சமமான மத்திம கொள்கையைக் கடைப்பிடித்தல் வேண்டுமென எதிர்பார்க்கப் படுகின்றது. ஏதேனும் ஒரு பண்பில் தீவிரத் தன்மையைக் காட்டுவதில் தம் சொல், செயல் ஆகியன தொடர்பில் சரியாகப் புரிந்து கொள்வதற்கு அது தடையாக இருக்குமென மனோவியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஒரு நல்ல ஆளுமை மிக்க மனிதனாக ஆவதற்கு நாம் மேலும் சில பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். நாம் பிறர் சொல்பவற்றை ஆர்வமுடன் அவதானித்துக் கேட்பவராக இருத்தல் வேண்டும். பலர் தமது துக்கங்களையும், சோகங்களையும், பிரச்சினைகளையும் தமக்குள்ளேயே அடக்கி வைத்துத் தவித்துக் கொண்டிருப்பார்கள். அத்தகைவர்களுக்கு அவற்றை யாரிடம் சொல்வதென்று தெரியாது. இத்தகையவர்கள் தமது துக்கங்களை மனம் விட்டுச் சொல்லும்போது அதனை ஆர்வமுடன் கேட்டுக் கொண்டிருந்தாலே அவர்களின் அரைவாசித் துக்கம் குறைந்து போய்விடும். அவர்களின் மனதில் நீங்கள் மென்மேலும் உயர்ந்து போய்விடுவீர்கள். பிறர் பேசுவதைச் செவிமடுத்துக் கேட்பவன் என்பவன் ஒரு சிறந்த பேச்சாளனை விடப் பிரபலமானவன் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

சாதாரண மனிதர்களை யாரும் தேடிச் செல்வதில்லை. ஆனால், சில மனிதர்களைப் பலர் தேடிச் சென்று சந்தித்து அளவளாவ ஆசைப்படுவார்கள். அத்தகைய மனிதர்களுடன் பேசிக் கருத்துப் பரிமாற்றம் செய்யும்போது ஆனந்தமாகவும் பரவசமாகவும் இருக்கும். இன்னும் சிறிது நேரம் இவருடன் பேசிக் கொண்டிருக்க மாட்டோமா? என்றும் தோன்றும். சந்தித்துவிட்டுச் சென்றபின் மனதுக்குக் கிலேசமாகத் தோன்றுவதுடன் அது ஒரு சுகானுபவமாகவும் இருக்கும். அவர்களே உயர்ந்த ஆளுமைமிக்கவர்கள்.

Vijey விஜய்
விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
இல:08, ஹூனுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02
தொலைபேசி: 2314714, பெக்ஸ்: 2314968

## இலங்கை மாணவர்களுக்கான இந்தியப் புலமைப் பரிசில் வாய்ப்பு

'மகாத்மா காந்தி' புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் க.பொ.த சாதாரண தரத்தை முடித்துக்கொண்ட இலங்கை மாணவர்களுக்கு இந்தியாவில் கல்வி கற்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

க.பொ.த சா/த பரீட்சையில் 70%ற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட 15-20 வயதிற்குட்பட்ட 100 மாணவர்கள் காந்தி புலமைப்பரிசிலுக்காக வருடந்தோறும் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்கள் தெற்கு, மேற்கு, மத்திய, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களைச் சேர்ந்த மாணவர்களாயிருப்பார்கள்.

காந்தி புலமைப் பரிசிலைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்களுக்கு மாதந்தோறும் 1,500 ரூபா (இலங்கை) வழங்கப்படும் என்றும், பெற்றோருடைய ஆண்டு வருமானம் ரூபா 240,000 ஆக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயமும், இலங்கைக் கல்வி அமைச்சும் இணைந்து இம்மாணவர்களைத் தெரிவு செய்யும்.

இது தொடர்பான விளம்பரம் ஒவ்வொரு வருடமும் ஆவணி மாதத்தில் அனைத்துத் தேசிய நாளிதழ்களிலும் பிரசுரிக்கப்படும். விண்ணப்பிக்கின்ற மொத்த எண்ணிக்கையில் 300 மாணவர்கள் நேர்முகத் தேர்விற்காக அழைக்கப்படுவர். பின்னர் அவர்களில் 100 மாணவர்கள் மட்டும் தெரிவு செய்யப்படுவர் என்றும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

## கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி முடித்த ஆசிரியர்களுக்கு உரிய நியமனம் வழங்கப்படவில்லை!



கல்வியியற் கல்லூரிகளில் மூன்று வருட காலப் பயிற்சியினை நிறைவு செய்து கொண்ட ஆசிரியர்களுக்கு உரிய முறையில் நியமனங்கள் வழங்கப்படவில்லையென்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் கல்வி வளர்ச்சியினை முன்னேற்றுவதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் ஒன்றாகக் கல்வியியற் கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. பயிற்றப்பட்ட சிறந்த ஆசிரியர்களை உருவாக்குவதே இக்கல்லூரிகளின் நோக்கமாகும்.

இக்கல்லூரிகளின் மூன்று வருடகாலப் பயிற்சியின் போதும் மாணவர்களுக்குக் கற்பிக்கும் முறை பற்றியே ஆசிரியர்களுக்குப் போதிக்கப்படுகிறது. இப்பயிற்சியினைப் பெற்றுக் கொண்டவர்கள். சிறந்த ஆளுமையுள்ள ஆசிரியர்களாக வெளியேறுகின்றனர்.

கடந்த வருடம் மூன்று வருடகாலப் பயிற்சியினையும் முடித்துக் கொண்டு வெளியேறிய கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களுக்கு இதுவரையிலும் நியமனங்கள் வழங்கப்படவே இல்லை.

5, ஜனவரி 2006 அன்று, இவ் ஆசிரியர்களுடைய நியமனம் தொடர்பாகக் கல்வியமைச்சர் கலந்து கொண்ட விழாவில், அவர் குறிப்பிட்டதாவது, 'கல்வியியற் கல்லூரிப் பயிற்சியினை முடித்த ஆசிரியர்களை இம்மாதமே (ஜனவரி 2006) பாடசாலையில் நியமிக்கவுள்ளோம்' என்றார்.

## கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இலவச தமிழ் வகுப்பு

தமிழ் மாணவர்களுக்கான எழுத்தாற்றலையும், மொழியாற்றலையும் வளர்க்கும் பொருட்டில் தமிழ் மொழியிலுள்ள இலக்கண இலக்கியங்களை இலவசமாகவே கற்பிப்பதற்கான ஏற்பாடுகளைக் கொழும்பு தமிழ்ச் சங்கம் செய்துள்ளது.

தரம் 4-10 வரை உள்ள மாணவர்கள் இவ்வகுப்புகளில் கலந்து கொள்ள முடியும். மாணவர்களுடைய நலன் கருதியே நடத்தப்படும் இவ் வகுப்புகள் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் முற்பகல், பிற்பகல் என இரு வேளை வகுப்புகளாகவும் வார நாட்களில் பிற்பகல் வேளையிலும் நடைபெறவுள்ளதாகச் சங்க அலுவலகம் தெரிவித்துள்ளது.

மாணவர்கள் பெற்றோருடைய அனுமதியுடனேயே விண்ணப்பம் செய்தல் வேண்டும். இதற்கான விண்ணப்பங்களைச் சங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டுள்ளதுடன் இவ்வகுப்புகளில் கற்பிப்பதற்கு ஆர்வமும் திறமையும், சமுதாய அக்கறையும் உள்ள ஆசிரியர்களையும் விண்ணப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளது.

## விஜய் வாசகர் அறிவுப் போட்டி

வாசகர்களே! இம்மாதம் 1ஆம், 8ஆம், 15ஆம், 22 ஆம், 29 ஆம் திகதி ''விஜய்'' இதழ்களை உன்னிப்பாக வாசிப்பதுடன் அவற்றை பாதுகாத்தும் வையுங்கள். இந்த இதழ்களில் உள்ள விடயங்களில் இருந்து வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றுக்குச் சரியான விடையளிக்கும் 3 அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குப் பெறுமதிமிக்க கல்குலேட்டர் (Calculater) அல்லது டி.வி கேம்ஸ் (T.V.Games) பரிசுகளாக வழங்கப்படும்.

* போட்டி ஒவ்வொரு மாதமும் நடைபெறுவதுடன் வினாக்கள் மாதத்தின் முதல் வாரத்தில் பிரசுரிக்கப்படும்.
* நான்கு மாதங்களுக்கொருமுறை மாபெரும் பரிசுக் குலுக்கல் மூலம் மேலும் மூன்று அதிர்ஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு உயர் பெறுமதியிலான பரிசுகள் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சாரணர் இயக்கத் தந்தை

# பேடன் பவல்





சாரணர்கள் என்பவர்கள் சகல விதத்திலும் மிகத் திறமையானவர்களாகக் கருதப்படுகின்றார்கள். முயற்சி, தைரியம், அர்ப்பணித்தல், துணிவு, வீரம் என்பவற்றினூடாக முழு உலகையும் வெற்றி காணத் துடிப்பவர்கள். இவையே இவர்களின் முழு நோக்கமாக இருக்கும். மற்றவர்களை மதித்துக் கௌரவிக்கும் பண்பு, ஒத்துழைப்பு வழங்கல் என்பன இவர்களிடம் அதிகமாகவே காணப்படும்.

ஒவ்வொருவருக்கும் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி உலகச் சாரணர் தினம் கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டு இலங்கையில் இத்தினம் நுவரெலியாவில் கொண்டாடப்பட்டது.

## பேடன் பவல் பிரபு


சாரணர் இயக்கம் என்பது இன்று உலகம் பூராவிலும் பரந்து வளர்ந்துள்ள மிகப் பிரபல்யமான தொண்டர் இயக்கமாகும். இவ்வியக்கம் தொடர்பாகப் பேசும் போது இவ்வியக்கத்தின் ஆரம்பகர்த்தா யார்? எனப் பலரும் கேட்கக் கூடும். இன்று உலகம் பூராவும் வியாபித்துள்ள இவ் இயக்கத்தின் ஆரம்பத்திற்கு வழிவகுத்தவர். றொபர்ட் ஸ்டிவன்சன் ஸ்மித் பேடன் பவல் பிரபுவாகும். ஆனால் உலகிலுள்ள சாரணர்கள் அனைவரும் அவரை அன்புடன் "B.P" என்ற சுருக்கப் பெயரில் அழைக்கின்றனர். அந்தளவில் இவர் சாரணர்கள் அனைவருக்கும் நல்ல நண்பர். பவல் அவர்களின் தந்தை சிறுவயதில் மரணித்தார். ஆனால் அவர் தன் சொந்த முயற்சியால் கல்வியைக் கற்றதோடு இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டார். கால்பந்து விளையாட்டில் அதிக ஆர்வம் காட்டியதோடு பிற்காலத்தில் ஒரு சிறந்த கால்பந்தாட்ட வீரராகவும் இருந்தார்.

அதுமட்டுமன்றிப் பேடன் பவல் அவர்கள் பின்னர் ஒரு துணிவுள்ள போர் வீரனாகவும் இருந்தார்.

பேடன் பவல் அவர்கள் கி.பி 1815 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி பிறந்து 1941 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இறந்தார். சாரணர் இயக்கத்தை ஆரம்பிக்க முழு மூச்சுடன் செயற்பட்டார். இதற்காக முழு உலக நாடுகளிலும் தன்னால் முடிந்த செயற்பாடுகளை ஆரம்பிக்க மிகுந்த முயற்சியுடன் செயற்பட்டு வெற்றி கண்டார். அவரது கடும் உழைப்பு, முயற்சி என்பவற்றை நினைவு கூர்வதற்காகப் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி "உலகச் சாரணர் தினம்" எனப் பிரகடனப்படுத்தப்பட்டது.

## சாரணர் இயக்கம்

இற்றைக்கு மிகப் பிரபல்யமான அரச சார்பற்ற சர்வதேச அமைப்பாக இருப்பது சாரணர் இயக்கம் எனப் பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். சாரணர் இயக்கமானது மூன்று உறுதி மொழிகளுடனும், பத்து உள்வாரியான விதிமுறைகளையும் அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வரும் அமைப்பாகும்.



## உலகின் முதலாவது சாரணர் பாசறை

உலகின் முதலாவது சாரணர் பாசறை 1907 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் பிறவுன்சித் தீவுகளில் 20 சாரணர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து உலகின் பல நாடுகளில் இவ்வியக்கம் மெல்ல மெல்ல வியாபிக்கத் தொடங்கியது. சாரணர்களின் ஒத்துழைப்பு, ஒவ்வொருவரிடம் காட்டும் நட்புறவு, அவர்களின் பழக்க வழக்கம், சம்பிரதாயங்கள் என்பவற்றைச் சாரணர் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளும் நோக்குடன் 1920 ஆம் ஆண்டு லண்டன் நகரில் முதலாவது ஜம்போரி நடைபெற்றது. அதன் பின் உலகின் சமாதானம், நட்புறவு என்பவற்றைக் கட்டாயமாகக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையைச் சாரணர் இயக்கம் உணர்ந்து செயற்பட்டது. இதன் விளைவாக ஒலவ் பேடன் பவல் அம்மையார் பிரபுவின் அனுமதியுடன் சாரணப் பெண்களின் இயக்கத்தை ஆரம்பித்தார். இவ்வியக்கம் 1917 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இற்றைக்கு உலகின் மிகப் பிரபலமான அரச சார்பற்ற சர்வதேச இயக்கமாக இருப்பது சாரணர் இயக்கம் என்பது பலரும் அறிந்த விடயமாகும். சாரணர் இயக்கம் மூன்று உறுதி மொழிகளுடனும், பத்து உள்வாரியான விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டும் செயற்படுத்தப்பட்டு வரும் அமைப்பாகும்.



## இலங்கையின் சாரணர் இயக்கம்

இலங்கையின் சாரணர் இயக்கமானது "பிரான்சிஸ் ஜோர்ஜ் ஸ்டிவன்சன்" என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இதனை ஆரம்பித்து வைத்த பெருமை இவரையே சேரும். எதிர்கால இலங்கைக்கு ஒரு சிறந்த சமூகத்தை வழங்கும் அடித்தளத்தை [illegible] பாடசாலை என்ற பெருமையை மாத்தளை கிறிஸ்துதேவ வித்தியாலயம் பெற்றுக் கொள்கின்றது. பாடசாலையிலேயே 1912 ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் பின்பு இலங்கையின் முதலாவது சாரணர் இயக்க மாநாடானது 1917 ஆம் ஆண்டு ஹவ்லொக் மைதானத்தில் இடம் பெற்றது. மெல்ல மெல்ல வளர்ச்சி பெற்று வந்த இந்த இயக்கம் 1918 ஆம் ஆண்டு இலங்கை பூராவிலும் பரவியது. முதன் முதலில் கடற் சாரணர் இயக்கமானது திருகோணமலையில் உருவாகியது. இது இலங்கையின் சாரணர் இயக்க வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக இருந்தது. 1963 ஆம் ஆண்டு இலங்கை உலக சாரண இயக்க அமைப்பில் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டது. இதன் மூலம் எம் நாட்டுச் சாரணர்களுக்குச் சர்வதேச அனுபவத்தைப் பரிமாற்றம் செய்து கொள்ளும் ஒரு சிறந்த சந்தர்ப்பம் உருவாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு...



பிரேஸிலைச் சேர்ந்த மார்கஸ் பொன்டஸ் என்ற விண்வெளி விஞ்ஞானி சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் செல்வதற்காக மொஸ்கோவுக்கு அருகிலுள்ள ஸ்டார் நகரத்து விண்வெளித் தகவல் நிலையத்தில் பயிற்சி பெற்று வருகிறார். இப்பயிற்சிக்கென விசேடமானதொரு உடையைத் தயாரித்து அணிந்து கொண்டு பெப்ரவரி 27,2006 அன்று பயிற்சியிலீடுபடத் தொடங்கியுள்ளார்.


இவருடன் ரஷ்யாவைச் சேர்ந்த விண்வெளி ஆய்வாளர்கள் பவல் வினோகிரேடவ், அமெரிக்காவைச் சேர்ந்த ஜெஃப்ரி வில்லியம்ஸ் ஆகியோரும் செல்லவுள்ளனர். பவலும், ஜெஃப்ரியும் கூட முன்பு பயணித்தவர்களில்லையானாலும், மார்க்ஸ் தான் மிகக் கடினமான பயிற்சிகளையெல்லாம் கவனமாகச் செய்து வருகிறார். இம்மூவருடைய பயணங்களும் மார்ச் 30 அளவில் இடம்பெறும் என்கிறது நாஸா வட்டாரம்.

# விண்வெளித் தகவல்கள்

லதா

1962—1981 வரையில் அமெரிக்காவின் CBS மாலை நாளிதழில் பணியாற்றிய 'வோல்டர் க்றொங்கைட்' என்பவருக்குச் சந்திரனில் உள்ள பாறை வடிவத்திலான விருது வழங்கிக் கௌரவித்திருக்கிறது நாஸா. மேற்படி, பத்திரிகையில் இவர் பணியாற்றிக் கொண்டிருந்த போது நாஸாவின் விண்வெளி தொடர்பான செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருந்தார்.

## சந்திரப் பாறையோடு பிரியாவிடை பெற்ற வோல்டர்



பத்திரிகையாளர் என்பதற்கு அப்பால் நாஸா பற்றியும், விண்வெளி பற்றியும் விஞ்ஞானிகள் தெரிந்திருக்கக் கூடியளவு செய்திகளை வோல்டர் தெரிந்து வைத்திருந்தார். சந்திரனில் மனிதன் கால் பதித்த 1969 ஆம் ஆண்டு அது பற்றிய செய்தியை மிகத் தெளிவாகவும், பரபரப்பாகவும் வெளியிட்டவர் என்பதுடன் அதற்கு முன்னரான ஆயத்தங்கள், பயணங்கள் என்பன குறித்தும் மக்களுக்கு ஆர்வத்தைத் தூண்டும் படி எழுதினார். பத்திரிகையிலிருந்து இளைப்பாறிய பின்பும் கூட நாஸாவுடன் நல்லுறவைப் பேணி வந்தவர்.

புதன் கிரகம், மேடராசி, அப்பொலோ—11 ஓடம் என்பன பற்றி அதிகமாகவும் சுவாரஸ்யமாகவும் எழுதியவர் வோல்டர்.

வோல்டருடைய சேவையில் நிறைந்து போன நாஸா, சந்திரனிலுள்ள பாறை வடிவத்திலான விருதினை வழங்கிக் கௌரவித்துள்ளது. இவ்விழாவினைக் காணப் பெருந்திரளான மக்கள் கூடினராம்.

## நட்சத்திரத்தைச் சுற்றி தோன்றிய சுழல்

விண்வெளி விஞ்ஞானிகள் இதுவரையில் கண்டிராத அதிசயமாக நட்சத்திரச் சுழல் தோன்றியிருக்கிறது. வளைய வடிவமான சுழல் ஒன்று நட்சத்திரத்தைச் சுற்றி ஏற்பட்டிருப்பதைச் செய்மதி பதிவு செய்து அனுப்பியுள்ளது.



இச் சுழல் நட்சத்திரத்துடன் மோதுவது போலவும் காட்சியளிக்கிறது என்கின்றனர் விஞ்ஞானிகள். இதற்கு முன்பு வால் நட்சத்திரங்கள் செய்மதிகளுடன் மோதியிருக்கின்றன. அது குறித்த இரண்டு மூன்று தகவல்கள் உள்ளன.

நட்சத்திரத்தைச் சுற்றி மேற்படி சுழல் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளன எனினும், தற்போது முதன்முதலாக ஏற்பட்டிருப்பது குறித்து ஆச்சரியமாகவே இருக்கிறது என்கின்றனர் விஞ்ஞானிகள்.

## புளூட்டோவில் மேலும் இரண்டு சந்திரன்கள்



சூரியத் தொகுதியில் இறுதியாகக் கண்டுபிடிக்கப்பட்ட கிரகம் புளூட்டோ. இது பூமியிலிருந்து மிகவும் தொலைவில் இருப்பதால் இது பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் மிகவும் குறைவு. ஆனாலும் சமீபகாலமாக இது பற்றிய பல தகவல்கள் நமக்குக் கிடைத்த வண்ணமே உள்ளன.

அதன்படி, புளூட்டோ கிரகத்துக்கு ஒரு சந்திரன் இருப்பதாக ஏற்கனவே அறிந்தோம். அதனில் தொடர்ந்த ஆராய்ச்சியின் தொடர்ச்சியாக தற்போது மேலும் இரு சந்திரன்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள்.

சூரியனிலிருந்து 300 கோடி மைல்கள் தொலைவில் உள்ள புளூட்டோவின் முதலாவது சந்திரன் கண்டுபிடிக்கப்பட்டது 1978 ஆம் ஆண்டுக்குப் பின்புதான்.

புளூட்டோ கிரகத்தின் பாதியளவு கொண்ட 'சரோன்' என்ற இந்தச் சந்திரன் 1,200 மீற்றர் விட்டம் கொண்டது.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள இரண்டு புதிய சந்திரன்களும் சரோனின் சுற்றுப் பாதைக்கு வெளியே தான் சுற்றி வருகின்றன. அமெரிக்காவின் நிப்பின் டெலஸ்கோப் மூலம் கிடைத்த படங்களைக் கொண்டே இப்புதிய சந்திரன்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நாஸா தெரிவித்துள்ளது. அவற்றுக்குப் பி-1, பி-2 என்று விஞ்ஞானிகள் பெயர் சூட்டியுள்ளனர்.

புளூட்டோவிலிருந்து பி-1 தான் அதிக தொலைவில் உள்ளது. இதன் விட்டம் 60-165 கி.மீற்றர் ஆகும். பி-2, பி-1 இன் அளவிலிருந்து 20% சிறியதாகவும் இருக்கிறதாம்.

**'விஜய்' அடுத்த இதழ் மார்ச் 15 ஆம் திகதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வருடத்தின் ஆரம்பத்துடன் பெய்த பெருமழையின் போது இலங்கையின் பல நகரங்கள் அவற்றின் வீதிகள், வீடுகள், வெள்ளத்தில் மூழ்கின. இதற்குக் காரணம் தாழ்நிலப் பிரதேசத்தினை மேடாக்கி அவற்றை அபிவிருத்தி செய்தமையாகும் என்று குற்றம் சுமத்தப்பட்டது.

## ஈரவலயத் தாழ்நிலம் அல்லது சதுப்பு நிலம் என்பது என்ன?

புவியியல் பாடம் படிப்போர் தரைத்தோற்றங்களையும் நில வகைகளைப் பற்றியும் படித்திருப்பார்கள். இங்கு நாம் ஈர நிலம் அல்லது சதுப்பு நிலம் பற்றிய விசேட அம்சங்களையும், தன்மைகளையும் ஆராய்வோம். ஈர நிலம் என்பது, வருடம் முழுவதும் நீர் கொண்டதாகவும், சாதாரண நில மட்டத்தை விடத் தாழ்ந்த உயரத்திலும் காணப்படும் நிலப்பிரதேசமாகும். இவை, அநேகமாக வறண்ட வலயக் காலநிலைப் பிரதேசத்தில் மிக இலகுவில் இனங்காணக் கூடியதாக இருக்கும். பல தசாப்தங்களாக இத்தகைய பூமிப் பிரதேசம், ஒரு பிரயோசனமும் அற்ற பிரதேசமாக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் குப்பை கூழங்கள் போடுவதற்கு உகந்ததெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், 1971 ஆம் ஆண்டு இடம்பெற்ற சர்வநிலம் தொடர்பான மாநாடு இந்நிலங்களின் முக்கியத்துவத்தினைக் கோடிட்டுக் காட்டியது.



### ரம்ஸா ஒப்பந்தம்

1971 ஆம் ஆண்டு ஈரானின் ரம்ஸா நகரில் உலக நாடுகள் இணைந்து ஈர நிலங்களைப் பாதுகாத்தல் தொடர்பான ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தின. இவ்வொப்பந்தம் ஈர, சதுப்பு நிலங்களில் அழிவுகளைத் தடுத்தல் மற்றும் முகாமைத்துவத்துக்கு வழிவகுக்கிறது.

இவ்வொப்பந்தம் ஈரநிலம் தொடர்பான புது அர்த்தத்தையும் வரைவிலக்கணத்தையும் வழங்குகின்றது. இதன் பிரகாரம் இயற்கையான அல்லது செயற்கையான, நிரந்தரமான அல்லது தற்காலிகமான, நிலையாக இருக்கும் அல்லது பாய்கின்ற நன்னீர் நிலைகள், கடல் நீரேரி அல்லது களப்பு, முற்றாக நீர் மூடிய நிலம் அல்லது நீர் வடியும் காலத்தில் நிலத்துக்கு மேல் 6 மீற்றருக்குக் கடல் நீர் காணப்படும் நிலப்பிரதேசம் ஆகியவை ஈர, சதுப்பு நிலப்பிரதேசங்களாக வரைவிலக்கணப்படுத்தபட்டுள்ளன.

இவ்வித வரைவிலக்கணத்தால் இதுவரை இனங்காணப்படாதிருந்த பல புறக்கணிக்கப்பட்ட பகுதிகள் இதற்குள் வருகின்றன. பல தாவர, உயிரின வகைகளும் இதில் சேர்கின்றன. இலங்கையின் கடற்கரைப் பிரதேசமும் உள்நாட்டின் பல பகுதிகளும் இதற்குள் உள்ளடங்குகின்றன. இலங்கை மேற்படி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு 1990, ஜூன் 22 ஆம் திகதியில் இருந்து செயற்பட்டு வருகின்றது. இன்று வரை 148 நாடுகள் இதில் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

### விசேடத்துவ பூமிப்பிரதேசம்

கடந்த காலத்தில் ஈர, சதுப்பு நிலமென்பது எந்தவிதப் பிரயோசனங்களும் அற்ற தேவையற்ற பிரதேசமாகவே கருதப்பட்டு வந்தது. ஆனால், தற்காலத்தில் இந்நிலப் பிரதேசம் மனிதன் உட்பட ஜீவராசிகள், தாவரங்களின் உயிர் வாழ்வின் மிக முக்கிய அங்கமாகக் கருதப்படுகின்றது. பல்லினத்துவ விலங்குகள், தாவர வகை, பூச்சிகள், பறவைகள், மீனினம் ஆகியவற்றின் உறைவிடமாக இது உள்ளது.

**விஜயபாகுவின் படைத் தளபதி நாகன் சிறுவயது முதலே நன்கு படைக்களப் பயிற்சி பெற்று நிறைந்த வீரதீர பராக்கிரமம் கொண்ட அஞ்சா நெஞ்சனாக இருந்தான். பில்லிசூனியம், மாயமந்திரம், பேய்பிசாசு வித்தைகள் நிறைந்த அக்காலத்தில் இவற்றுக்கெல்லாம் பயப்படாமல் நள்ளிரவிலும் பிசாசெனச் சஞ்சரிக்கும் எமகிங்கரனாக மதிக்கப்பட்டான்.**

# இயற்கை
# அளித்த கொ



### ஈர நிலத்தின் உபயோகங்கள்

மொத்த உயிரினத்தின் இருப்புக்கு உத்தரவாதமளிக்கும் பல முக்கிய விடயங்கள் ஈரமான சதுப்பு நிலத்தால் நிறைவேற்றப்படுகின்றன. இத்தகைய செயற்பாடுகள் பௌதீக மற்றும் உயிரினச் சூழலின் தொடர்ச்சியான இயக்கத்துக்கும் சமநிலையைப் பேணுவதற்கும் வழிவகுக்குகின்றன. இவை தொழில் தரும் பிரதேசங்களாகவும், இயற்கை அழகை அதிகரிக்கச் செய்யும் பிரதேசங்களாகவும் உள்ளன. குறிப்பாக:-

- உணவு உற்பத்தி
- நீர் வழங்கல்
- நிலத்தடி நீர் மட்டப் பாதுகாப்பு
- நீரைச் சுத்தப்படுத்துதல்.
- ஈர வலய தாழ் நிலத் தாவரங்கள் - அதிக மருத்துவக் குணமுள்ளன என்று அறியப்பட்டுள்ளன.
- கட்டிட நிர்மாணத்துக்கான மூலப் பொருட்களை வழங்குகின்றன.
- கைத்தொழில்களுக்கான மூல வளங்கள் கிடைக்கின்றன.
- கடல் மற்றும் காற்றால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்தல்.
- உயிரினச் சூழலின் பல்லினப் பன் முகத்தன்மையை அதிகரித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச ஈர நிலத்தினம்

ரம்ஸா ஒப்பந்தம் 1971 பெப்ரவரி இரண்டாம் திகதி உலக நாடுகளால் கைச்சாத்திடப்பட்டமையால் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 2 ஆம் திகதியை ஈர நிலத் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இது 1997 ஆம் ஆண்டு தொடக்கம் நிகழ்ந்து வருகின்றது. இப்பிரதேசத்தின் உயிரின, தாவரவியல் பல்லினத்துவம், சகல உயிர் வாழ்க்கைக்கும் இந்நிலம் எவ்வளவு அவசியமானது எனச் சிந்திக்க இத்தினம் பயன்படுகின்றது.

## ஈர நிலத்துள் அடங்குபவை யாவை?

ஈர நிலத்தை இரண்டு பெரும் பிரிவுகளாக வகுக்கலாம். அவை இயற்கையான ஈர நிலம், செயற்கையான ஈர நிலம் எனப்படும். மீண்டும் இயற்கை ஈர நிலம் நன்னீர் ஈரநிலம், உப்பு நீர், ஈரநிலம் எனப் பிரிக்கப்படுகின்றது.

நன்னீர் ஈர நிலமாக உள்ளூர் ஏரிகள், நதிகள், ஆறுகள், அருவிகளை அண்டிய பிரதேசம், சதுப்பு நிலம், நீர் தேங்கிய நிலம் அணைக்கட்டை அண்டிய பிரதேசங்களும் அடங்கும். உப்பு ஈர நிலப் பிரதேசத்துக்குள் கழிமுகம், பொங்குமுகம், கடல் நீர் ஏரிகள், களப்பு, கடற் பூங்கா முதலானவை அடங்கும். மனிதர்களால் மேற்கொள்ளப்படும் வயல் வரப்புக்கள், நீர்த்தேக்கம், கால்வாய், ஏரிகள் மற்றும் இத்தகைய பிரதேசங்களை அண்மித்த பூமிப்பிரதேசம் செயற்கை ஈரநிலமாகும்.

* பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவுதல்.

இவ்விதப் பல நன்மைகள் கிடைத்த போதும் மனித நடிவடிக்கையால் இவை பரவலாக அழிக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் நன்மைகளையும், உபயோகங்களையும் நன்கு புரிந்து கொள்ளாத மனிதர்களின் தூர நோக்கற்ற செயல்களால் இவற்றின் பரம்பல் குறைவடைந்துள்ளன.

## ஈர நிலங்கள் அழிவடைவதற்கான காரணிகள்

* ஈர நிலங்கள் மேடாக்கி அபிவிருத்தி செய்யப்படல்.
* ஈர நிலங்களை அண்டிய பிரதேசங்கள் துப்புரவாக்கப்படுதல்.
* இந்நிலங்களைக் குப்பை, கழிவுகள் போடுவதற்குப் பயன்படுத்துதல்.
* இந்நிலங்களுக்கு இயற்கையாகக் கிடைக்கும் நீர் வழங்கல் மார்க்கங்களைத் தடை செய்தல்.
* மணல் தோண்டி எடுத்தல்.
* இந்நிலப் பிரதேசத்தில் ஜீவிக்கின்ற உயிரினங்கள் அழிவடைதல்.
* இந்நிலங்களுக்கு உரித்தற்ற அந்நிய ஜீவிகள் தாவரங்கள் ஊடுருவிப் பரவி ஆக்கிரமித்தல்.

உதா:- சீத்தா கொடி வகை, மன்னாவா என்ற மீனினம்.

எமது நாடு ஒரு தீவாகக் காணப்படுவதாலும், நாட்டின் பல பகுதிகளிலும் நிறையச் சிறு சிறு ஏரிகள் காணப்படுகின்றமையும், அவற்றை இணைத்துப் பல நதிகள், வாய்க்கால்கள் பாய்கின்றமையும் காரணமாக நாடு பூராவும் ஒரு சிறப்பான விவசாய முறைமை தோன்ற வழிவகுத்தது. இதனால் மக்கள்

**ஈர சதுப்பு நிலம் தற்காலத்தில் மனிதன் உட்பட ஜீவராசிகள், தாவரங்களின் உயிர் வாழ்வின் மிக முக்கிய அங்கமாகக் கருதப்படுகின்றது.**





...பொது சன நூலகம் யாழ்ப்பாணம்



# டை இலங்கையின் ஈரநிலம்



வா... கை ஈர நிலத்துடன் மிக நெருங்கிய தொடர்புபட்டதாக உள்ளது. ஆதலால் இந்நிலம் தொடர்பில் மிகப் பொறுப்புடனும், கவனத்துடனும் செயற்பட வேண்டிய தேவை உள்ளது.

2006 ஆம் ஆண்டு உலக ஈரநிலப் பிரதேசத்தின் தொனிப்பொருள்.

"வறுமை ஒழிப்பில் ஈர நிலம் ஒரு கருவி" என்பதாகும்.
**Wet land as tool in Poverty allevition**
பெப்ரவரி 2 ஆம் திகதி சர்வதேச ஈர நிலத்தினமாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பறவைகள் ஏன் வலசையில் போகின்றன?

இப்பொழுது, எமது மக்களில் பலர் போர் அனர்த்தம் காரணமாக நாடு விட்டு நாடு இடம் பெயர்ந்து போகிறார்கள். இது தமது உயிர்ப் பாதுகாப்புக் காரணமான இடப் பெயர்வு என்கிறார்கள். இதனை ஆங்கிலத்தில் - 'மைகிறேஷன்' (Migration) என்போம். ஆனால், உணவு, சீதோஷணம், பாதுகாப்புப் போன்றவை காரணமாக விலங்குகள், பறவைகளும் இடம் பெயருவதுண்டு. இவ்விதம், முக்கியமாகச் சீதோஷணம் காரணமாகவும் இனப் பெருக்கம் காரணமாகவும் ஓரிடத்தில் இருந்து பிறிதோர் இடத்துக்கு இடம் பெயர்ந்தும், ஒரு குறிப்பிட்ட காலத்தில் இடம் பெயர்ந்த இருவரும் ஒரு காலத்தில் தாம் முன்பிருந்த அதே இடத்துக்கு மீண்டும் வந்து சேருகின்றன. இத்தகைய போக்குவரவையே வலசை என்கிறோம்.

பறவைகளில், ஒரு சில மட்டுமே தமது இனப் பெருக்கத்துக்கும் உணவுக்கும் சீதோஷணத்தை ஒட்டி வலசை போகின்றன. இவற்றின் இடப் பெயர்வு, கண்டம் விட்டுக் கண்டம், தூர இடங்களுக்கு இடப் பெயர்வு என்று மிகவும் விநோதமாக இருப்பதைக் காணுகிறோம். இவ்வலசைப் பயணம் விநோதம் மட்டும் அல்ல, வசீகரமான நிகழ்வாகவும் கருதப்படுகின்றது.

பறவைகளின் உடல் அமைப்பு அவற்றுக்கு, அவ்வாறு வலசை போய்வர உதவியாகவும் இருக்கிறது. அதன் காரணமாக அவை பல்லாயிரம் கிலோ மீற்றர் தூரத்திலிருந்து செல்ல உதவி புரிவதைப் பார்த்தால் மிகவும் அதிசயமாகவும் இரம்மியமாகவும் இருக்கும். அவ்விதம் செல்லும் வலசைப் பயணம் ஓரிடத்தில் பல மணி அல்லது பல தினங்கள் தங்கிச் செல்லவும் செய்யுமாம்.

செனேகல் போன்ற, மேற்கு ஆபிரிக்கா போன்ற, இடங்களில் இருந்து குளிர் காலத்தில் வெண்கழுத்து நாரைகள் 4000 கிலோ மீற்றர் தூரத்துக்கு மேல் பறந்து வலசை போகின்றனவாம்.

வட அமெரிக்காவின் 'ப்புளோக்போல் வார்பலர்' (Blupoll Warbler) எனும் பறவையும் அவ்விதம் 4000 கிலோ மீற்றருக்கு மேல், வடக்கில் இருந்து விடாது ஒரேயடியாகப் பறந்து வலசை போகின்றனவாம். வட துருவத்தில் இருந்து 'ஆர்டிக் டொர்ன்ஸ்' எனும் பறவை இவ்வாறு வலசைப் பரப்பில் நீண்ட தூரம் செல்வதில் முதலிடம் பெறுகிறது. இப் பறவைகள் தமது இனப் பெருக்கச் செயற்பாட்டுக்காக வட துருவத்தில் இருந்து தென் துருவப் பிரதேசங்களுக்குக் குளிர் காலத்தில் 18,000 கிலோ மீற்றர் தூரத்துக்கு மேல் வலசை போகின்றன. இவ்விதம் அங்கு சென்று சில மாதங்களுக்குப் பின்னர் மீண்டும் வட துருவத்துக்குத் திரும்பி விடுகின்றன. இவ்வாறு அவை, ஏறத்தாழ ஓர் ஆண்டுக்கு 36,000 கிலோ மீற்றர் தூரத்துக்கு மேல் பயணஞ் செய்து மீண்டும் தமது நிரந்தர உறைவிடத்துக்குத் திரும்பி வருவது ஆச்சரியத்துக்கு உரியதாகிறது.

பறவைகளில் சிலவற்றுக்கு, தமது நிரந்தர உறைவிடங்களில் உணவு கிடைக்காமல் அவதிப்படுவதுண்டு. அதைத் தாங்க முடியாது அவை பசியால் மாண்டு போவதும் உண்டு. குளிர்ப் பிரதேசத்தில், குளிர் அதிகமாகப் பாதிப்புகளை உண்டு பண்ணுவதால் அவை பல வழிகளில் இடர்களுக்கு உள்ளாவதுண்டு. அதன் காரணமாகவே, அங்கு வாழும் பறவைகள் வெப்ப காலத்தில் தென் மண்டலப் பிரதேசங்களுக்கு இடம் பெயர்ந்து இடை வெப்ப காலத்தில் நிரந்தர வசிப்பிடங்களுக்குத் திரும்பிக் கொள்ளுகின்றன.

வெப்ப காலத்தில், அதாவது கோடை காலத்தில் நீர்ப் பஞ்சம் நிலவும். ஆறு, குளம், குட்டைகள் வரண்டு போகும். அக்காலங்களில் உயிரினங்கள் பல, நீரின்றிக் கஷ்டப்படும். குறிப்பாக - பறவைகள் நீருக்காகவும் ஈர சீதோஷணச் சூழ்நிலைக்காகவும் தமது கூடுகளை விட்டு நீர் நிலைகளைத் தேடி அலைந்து இடம் பெயரவுஞ் செய்கின்றன. அது சாதாரணமாக நிரந்தர இடங்களை விட்டுப் புதிய நீர் நிலைகளை அண்டிய பிரதேசங்களுக்குத் தற்காலிகமாக இடம் பெயரவுஞ் செய்கின்றன. இது மட்டும் அல்ல. பறவைகளின் இரையாக விளங்கும் பூச்சிகள் வாழ்விடங்களை நாடிப் பறவைகள் இடம் மாறி இடம் மாறிப் பெயரவுஞ் செய்யும். குளிர் காலத்தில், வட துருவப் பிரதேசப் பிரதேசங்களின் உயிரின வாழ்வும் மாறும். அதன் காரணமாகவும் பறவைகள் வட துருவத்தில் இருந்து தென் துருவ மண்டலத்துக்கு வலசை செல்லும். உயிர் வாழ்வதற்காகப் பறவைகள் வலசை போகின்றன என்று குறித்துக் கருதப்பட்டாலும் வேறு காரணங்களுக்காகவும் அவை இப்பறப்புக்களைச் செய்கின்றன என அறிவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவர்கள் கூறும் கூற்றுக்கள் மிகவுஞ் சிக்கலாக இருக்கின்றன. அவை ஆய்வுக்குரியன. எடுத்துக் காட்டுக்கு - ஒன்றை மட்டும் இங்கு கூறலாம்.

பெரும்பாலான வட துருவ உயரினங்களில் பல வகையான பறவை இனங்கள் தமது வெப்ப வலய வாழ்விடங்களை, அவற்றின் அதிகுளிர் உள்ள இடமாக இருந்தும் அவ்விடங்களை விட்டகன்று செல்லாது இருப்பதேன்? என்ற வினா எழுகிறதே! அப்படியும் இடப் பெயர்வு நிகழ்வதில்லையே! வெப்பமும் ஏராளமாக இரையும் இருந்த போதிலும் அவை தமது குறிப்பிட்ட வாழ்விடத்தை விட்டு அகல்வதேன்? இன்னும் இது விடை காண முடியாத கேள்வியாகத்தான் இருக்கிறது.

**ஆய்வுடை அறிவியலாளர் சிலர் இதற்குப் பல காரணங்களை முன் வைக்கிறார்கள். அவற்றில் ஒன்று :**

வருடத்தில் சில காலங்களில் சில பறவைகளின் உடலில் உள்ள சுரப்பிகள் ஹோமோன்ஸ்கள் (Hormons) சுரப்பதால், அவை வலசை போகத் தூண்டப் பெறுகின்றனவாம். இருப்பினும் இக்காரணம் ஏன்? எதற்கு? என்று சரியாக விடை கூற முடியாக் கேள்விகளாகவே இருக்கின்றன.



## அறிவியற் கலசம்

பருக்கை : 51

அன்புச் செல்வங்களே,

நம் நாட்டு அரசியல் நெருக்கடி காரணமாக நாம் இடம் விட்டு இடம் பெயர்ந்து வேற்று நாடுகளுக்கு செல்கிறோம். ஆனால், மற்றைய உயிரினங்கள் தமது இனப் பெருக்கத்துக்காவும் சீதோஷணத்துக்காவும் ஆண்டில் ஒரு காலத்தில் இடம் பெயர்ந்து மீண்டும் தமது நிரந்தர இடத்துக்குத் திரும்பி வந்து விடுகின்றன அவ்விதம் பறவைகளின் இடம் பெயர்வையே தமிழில் 'வலசை செல்லுதல்' என்கிறோம். அதனை இங்கு பார்ப்போம். வாசியுங்கள். வாசித்தவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி மண் தந்த மற்றொரு கவிஞனின் கவிதை நூல்







கனிவுமதியின் 'கட்டாந்தரை' என்ற கவிதை நூல் கடந்த வாரம் கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் வைபவ ரீதியாக வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலாசிரியர் கவிஞனாக மட்டுமன்றி ஓவியராகவும் சஞ்சிகை மற்றும் நூல் தயாரிப்பில் நீண்ட காலம் பரிச்சயமுடையவராகவும் இருப்பதனால் அச்சுப் பதிப்பு, உருவ அமைப்பு, அட்டைப்படம், உள் பக்க வடிவமைப்பு, உள்படங்கள் முதலானவற்றில் மிகுந்த கரிசனை காட்டியுள்ளார். ஆதலால் இப்புத்தகத்தைக் கையிலெடுப்பவர்களைப் படிக்கத் தூண்டுவதில் நூலாசிரியர் வெற்றி பெற்றுள்ளார்.

இந்நூல் பற்றிக் கம்பவாரிதி அ.ஜெயராஜின் முன்னுரையில்:-

கனிவுமதிக்கு வாலறிவு ஓரளவு வாய்த்திருக்கிறது.

காலமும், சூழலும்,
நூலறிவை விரிவாகவும்
முறையாகவும் நுகரும்
வாய்ப்பை,
அவர்க்கு நல்காமல் விட்டன.
கனிவுமதியின் கவிதைகளில்,
வாலறிவின் வளமும்,
நூலறிவின் குறையும்,
இடையிடையே மின்னி,
நமக்கு அவரை இனம் காட்டி
நிற்கின்றன.

வாலறிவு தானாய்
அமைவது.
நூலறிவு தேடிப்
பெறுவது.
வாலறிவற்ற
நூலறிவோ என்றும்
முழுமையுற
முடியாதது.

நூலறிவற்ற வாலறிவோ முயன்றால்
முழுமையுறக் கூடியது.
தன் தனி முயற்சியால் தனித்து
அடையாளம் பெற்ற
கனிவுமதிக்கு,
காலமும், இளமையும் களம் தரக்
காத்திருக்கின்றன.
தன் நூலறிவை விரிவுபடுத்தவும்
கூர்மைப்படுத்தவும்,
அவர் இனியும் முயலலாம்.

முயன்றால்,
முழுமையுற்ற ஒரு கவிஞன் நமக்குக்
கிடைப்பான்.

உடுக்கை அடித்து
உரக்கப் பாடுகிறான் சித்தன்.
கேட்கும் பாடலால்
கேள்விகள் துளைக்கும்
எனும் கவிதைகள் கனிவுமதியின்,
வாலறிவு உண்மைக்காம் சான்றுகள்.
நூலறிவுக் குறைவுக்காம் சான்றுகள் சிலவும்
இந்நூலில் உள.
அவை காண்பது என் கருத்தல்ல.

மலையின் மடியில் வளர்ந்த
கனிவுமதியின் மனம்,
மண்ணில் தோய்ந்து மயங்கிக் கிடக்கிறது.
செல்வச் செழிப்பால் செயற்கைச் சிறையுள்
அடைபட்டுக் கிடக்கும்,
பட்டின ஜீவராசிகளுக்கு எட்டாத பல
மென்னனுபவங்கள்,
வறுமை தந்த வளமாய், வரமாய்,
ஏழைக்கிராம இளைஞனுக்கு எட்டுகின்றன.
அங்ஙனம் இயற்கையின் சுகானுபவங்களை,
இதயம் நிரப்பும் இனிய சுவாசமாய்ப்
பெற்றிருக்கிறார் கனிவுமதி.
அவர் கவிதைகளூடு, 'கொங்கிறீற்' காடுகளுள்
வாழும் பட்டணத்தாருக்கு, இயற்கையில்
எட்டாத பல இனிய அனுபவங்கள்
கிடைக்கின்றன. இது கனிவுமதியின்
கவிதையின் தனித்துவம்.

இந்நூலுக்கு எழுதியுள்ள முன்னுரையில் பேராசிரியர் சே.சந்திரசேகரன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:-

கவித்துவம், கவிதா இரசனை, கவிதையை இயற்றும் படைப்பாற்றல் என்பன ஒருவனில் உள்ளிருந்து பிறப்பவை. ஆசிரியர்களால் அவற்றின் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்த முடியுமே தவிர அவை மாணவர்களால் தமது சொந்த ஊக்கத்தின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட வேண்டியவை. இவ்வகையில் கவிஞர் கனிவுமதி ஆரோக்கியமான ஒரு கவித்துவப் பண்பைத் தம்மில் வளர்த்துக் கொண்டவர் என்பதோடு படைப்பிலக்கியப் பணியாலும் வெற்றிக்கொடி நாட்டிக் கொள்ளுமளவுக்குத் தம்மை வளர்த்துக் கொண்டு வருகிறார் என்பதற்கு அவருடைய கவிதைத் தொகுப்புகள் தக்க சான்று.

தனது உள்ளத்தில் ஊறி வரும் சிந்தனைகளைக் கூறத் தன்னை ஒரு சித்தனாக வரித்துக் கொள்ளும். கனிவுமதியின் நவீன சித்தன் கவிதைகள் என்ற தலைப்பின் கீழ் சித்தர் மயப்பட்ட பாடல்கள் கவிதைத் தொகுதியில் ஏராளம். சித்தர்கள் என்பவர்கள் யார்? அவர்களுடைய சமூகச் சிந்தனை என்ன? என்பவற்றை எல்லாம் கனிவுமதி அலசி ஆராய்ந்தே தன்னைச் சித்தனாக உருவகித்து, நடைமுறை உலகின் நிலைமைகளைக் கவிதைகளாகப் பாடியுள்ளார்.

கனிவுமதியின் கவிதைகளில் மலையக மக்கள் வாழ்கின்ற மண்ணின் வாசனை, அவலங்கள், வேதனைகள் என்பவற்றைக் கருப் பொருளாகக் கொண்டுள்ளார். பெண்ணியம் சார்பான இவரின் கவிதைகள் சிறப்பான இடம் பெற்றுள்ளன. மலையக மண்ணைப் பற்றிச் சிந்திக்கும் கனிவுமதி ஏராளமான நற்சிந்தனைகளைத் தன் கவிதைகளினூடாக முன்வைக்கின்றார்.

விலை : ரூ.190/=.
முகவரி : 15, சாவியா ஒழுங்கை, மட்டக்குளி, கொழும்பு-15. மற்றும் பூபாலசிங்கம் புத்தகசாலைகளில் கிடைக்கும்.

## நூல் அறிமுகம்

**எழுத்தாளர்கள், வாசகர்கள், "பொதிகை"க்கு ஆக்கங்கள், செய்திகள், படங்கள் என்பவற்றை அனுப்பி வைக்கலாம். ஆக்கங்கள் மிகச் சுருக்கமாக இருக்க வேண்டும். நூல் அறிமுகங்கள் செய்ய விரும்புவோர் நூலின் இரண்டு பிரதிகளை**
**நூல் அறிமுகம்,**
**ஆசிரியபீடம் த.பெ.எண் 2037,**
**கொழும்பு - என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்**

# மாவீரன் புள்ளிமான்




இதோ ஒரு கதைப் புத்தகம் உங்களுக்காக வெளிவந்திருக்கிறது. 'மாவீரன் புள்ளிமான்' என்னும் இந்த நூலை உங்கள் அண்ணா ஓ.கே.குணநாதன் எழுதியிருக்கிறார். குணநாதன் உங்களுக்கு நன்றாகத் தெரிந்தவர். அவர் உங்களுக்காக இதற்கு முன்னர் ஏழு நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறார். அவற்றை நீங்கள் படித்திருப்பீர்கள். இது அவரது எட்டாவது சிறுவரிலக்கிய நூல். சிறுவர் இலக்கியமாகத் தமிழிலே கவிதை வடிவில் அமைந்த நூல்களே அதிகம் எழுதப்படுகின்றன. சிலரே உரை நடையில் எழுதுகிறார்கள். அவர்களில் உங்கள் குணநாதன் அண்ணாவும் ஒருவர். இவர் சிறுவர்களாகிய உங்களுக்கு மிகவும் பொருத்தமான மொழிநடையில் எழுதுகிறார். இலகுவான சொற்கள், சின்னச் சின்ன வாக்கியங்கள், விறு விறுப்பான கதையோட்டம் என்பனவெல்லாம் இவருடைய உரைநடையில் இருக்கின்றன. குணநாதன் அண்ணாவுடைய கதைகளிலே உங்களைப் போன்ற பிள்ளைகள் பெரும்பாலும் கதாபாத்திரங்களாக வருகிறார்கள். அவர்கள் எங்களது சமுதாயத்திலே காணப்படும் சில கொடுமைகளையும் பிள்ளைகளுக்குச் செய்யப்படும் அநீதிகளையும் எதிர்த்துப் போராடுகிறார்கள். துணிகரமான செயல்களைப் புரிகிறார்கள். வெற்றி பெறுகிறார்கள்.

இப்போது நீங்கள் கையில் வைத்திருக்கும் "மாவீரன் புள்ளிமான்" என்னும் இந்த நாவலும் இவ்வாறு சிறப்பாக அமைந்த ஒரு நூலாகும். இந்தக் கதையிலே ஒரு மான், சிங்கம் ஒன்றை எதிர்த்து வெல்கிறது. அது எப்படி? கதையைப் படித்துப் பாருங்கள்.

இந்த நாவலிலே நீங்கள் வேறு கதைகளில் பார்த்திராத ஒரு புதுமை இருக்கிறது. அது என்ன தெரியுமா? காட்டு விலங்குகளைக் கொன்று அழிக்கின்ற சிங்கத்தைத் தான் அகற்றி விடுவதாகப் புள்ளிமான் கூறுகிறது. இது கதையின் முதற் பகுதி, அந்த மான் சிங்கத்தை எப்படி அகற்றியிருக்கும் என்பதைக் கதையின் பிற்பகுதியில் ஆசிரியர் ஆறு விதமாகக் கூறுகிறார். இந்த ஒவ்வொரு தீர்வும் வேறுவேறு விதமாகவும் புதுமையானவையாகவும் இருக்கின்றன. இந்த முடிவு ஒவ்வொன்றும் உங்களது படிக்கும் ஆவலைத் தூண்டும், மனத்தில் சிலிர்ப்பை உண்டாக்கும் என்பது நிச்சயம்.

இந்தக் கதையைப் படிக்கும் அளவில் நீங்கள் நின்றுவிட மாட்டீர்கள். "கதையின் முடிவு இப்படியும் இருக்கலாம், இப்படியும் அமையலாம்" என்று புதிது புதிதாகக் கற்பனை செய்யவும் தொடங்கி விடுவீர்கள், அதை எழுதவும் தொடங்குவீர்கள் என்று நம்புகிறேன். வாசிப்புக்கு என எழுதப்பட்ட இந்த நாவல் உங்களை எழுதவும் தூண்டும் என்றால் அது இந்த நூலினால் வரும் ஒரு புதிய பயன்பாடு அல்லவா!

விலை : ரூ.150/=.
முகவரி : எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு.

வ.இராசையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆந்தையும் வாத்தும்



ஒரு வீட்டில் ஆந்தையும் வாத்தும் சிநேகிதமாய் வாழ்ந்து வந்தன. இரண்டும் சேர்ந்து ஒரு தொழில் தொடங்க ஆலோசித்தன. அதற்கு அவைகளிடம் பணம் இருக்கவில்லை. வாத்திடம் தங்க நகைகள் இருந்தன. அவற்றைக் கொண்டு தொழில் தொடங்க நினைத்தன. தொழில் தொடங்குவதற்கு இருக்கும் இடம் பொருத்தமானதாக இருக்கவில்லை. அதனால் கடலைக் கடந்து சென்று ஒரு தீவில் தொழில் ஆரம்பிக்கலாம் என்று ஆந்தை கூறியது.

வாத்து அதை மறுக்காமல் சரி என்று கூறியது. இரண்டும் படகில் புறப்பட ஆயத்தமாகின. திட்டமிட்டபடியே நகைகளையும் எடுத்துக் கொண்டு ஒரு படகில் புறப்பட்டன.

பயணத்தின் போது பாதி வழியில் இராட்சத அலை ஒன்று தோன்றியது. ''கடவுளே காப்பாற்று'' என்று இரண்டும் பிரார்த்தித்தன. அலையினால் படகு ஒரு பக்கமாகச் சாயத் தொடங்கியது. இரண்டும் படகைக் கட்டிப் பிடித்துக் கொண்டன. தண்ணீர் படகைத் துளைத்துக் கொண்டு பாய்ந்தது. இரண்டும் அதிர்ச்சி அடைந்தன. வாத்து பயத்தினால் 'ஆந்தையாரே! ஏதாவது செய்து காப்பற்றுங்கள்'' என்று கத்தியது. ஆந்தைக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. படகு மெதுவாக நீரினுள் மூழ்க ஆரம்பித்தது. ஆந்தை உடனே வா இரண்டு பேரும் பறப்பதைத் தவிர வேறு வழியில்லை'' என்றது. வாத்து, முடியாது இதுவரைக்கும் சேர்த்து வைத்திருக்கும் தங்க நகைகளை விட்டு விட்டுப் போகமுடியாது'' என்றது. இறுதியில் ஆந்தையின் வற்புறுத்தலால் வாத்தும், ஆந்தையுடன் சேர்ந்து பறக்கத் தொடங்கியது. வெகுநேரம் பறந்து முதல் இருந்த இடத்திற்கே வந்து சேர்ந்தன.

அன்றிலிருந்து பகலில் வெளியில் வந்தால், தன்னால் சேமிப்பை இழந்த வாத்து என்ன சொல்லுமோ! என்ற பயத்தில் ஆந்தை இரவில் வெளியில் வருவது இல்லை.

வாத்து நீரின் மேல் மட்டத்திலேயே நீந்த ஆரம்பித்தது. எப்போதாவது தன் நகைகள் கிடைக்குமா? என்ற எதிர்பார்ப்பில் நீந்திக் கொண்டே இருக்கிறது.

**ம.சதீஸ்குமரன், யாழ்ப்பாணம்.**

## விடுகதைகள்

1. உயிரற்ற நீதிபதி ஒழுங்காகத் தீர்ப்பு வழங்குவார். அவர் யார்?
2. வட்ட வட்டத் தட்டுக்குள் விட்டதெல்லாம் பாம்புக்குட்டி. அது என்ன?
3. கொக்கு நிற்கக் குளம் வத்துகிறது. அது என்ன?
4. மூத்தவர் ஆற்றிலே, இளையவர் காட்டிலே, நற்குறி சொல்பவர் வீட்டிலே. அவர்கள் யார்?
5. ஒரு குப்பிக்குள் இரண்டு தைலம். அது என்ன?

**விடைகள்**

1. தராசு 2. இடியப்பம் 3. குப்பி விளக்கு
4. முதலை, உடும்பு, பல்லி 5. முட்டை

**த.தனுகரன், தரம் - 2, கிளி/முருகானந்த ம.வி, முரசுமோட்டை.**



மாணவர் ஆக்கங்கள்

## விஞ்ஞான விளக்கங்கள்

* மழைக்காலங்களில் சில கதவுகள், ஜன்னல்கள் மூட முடியாமல் இருக்கும்?
சில பலகைகள் நீரை உறிஞ்சும் தன்மை கொண்டவை. இதனால் நிலையை விடவும் கதவுகள், ஜன்னல்கள் பெரிதாகின்றன. இதனால் மூட முடியாமல் போய்விடுகிறது.

* பூத்துக் குலுங்கும் சில பப்பாளி மரங்கள் காய்ப்பதில்லை. அது ஏன்?
பாப்பாசி ஓரிலிங்கத்துக்குரிய தாவரமாகும். இங்கு கூறப்பட்டுள்ள தாவரம் ஆண் பூக்களைத் தோற்றுவிப்பனவாகும்.

**யோகலிங்கம் நிரூபிகா, தரம் - 10B, யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.**

## நோயைப் பரப்பாதே!



தெருவில் குப்பை போடாதே
தினமும் நோயால் வாடிடுவாய்
உருவில் சிறிய ஈயினால்
உனக்கு அழிவைத் தேடாதே.
அயலில் குப்பையைப் போடுவதால்
அதிகம் பெருகிடும் நுளம்புகளே
அதனை அழிக்கத் திடம் கொண்டு
அசுத்தம் போக்கிட முயன்றிடுவாய்!
குப்பைத் தொட்டி இருக்கையிலே
கூடும் கழிவைப் போடாமல்
அயலில் அவற்றைப் போட்டு விட்டு
அழிவை ஏனோ தேடுகிறாய்
ஈயும், நுளம்பும் உனக்கு எதிரி
இதை நீ எப்போதும் மறக்காதே
பாயும், நோயும், படுக்கையும் என்று
பலநாள் வாடிட நேர்ந்திடுமே.
வீடும் வீதியும் சுத்தம் என்றால்
விளங்கும் உந்தன் வாழ்வும் சிறப்பாய்
நாடும் உயரும், நாமும் உயர்வோம்
நல்லவை எங்கும் பரவிடுமே.

**ஆர்.சர்மிளா, தரம் - 10B, பாரதி ம.வி, பதுளை.**

## விவேகானந்தர் வாழ்வில்



சுவாமி விவேகானந்தர் 1863 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் நாள், கல்கத்தாவில் பிறந்தார். இவர் வாழ்வில் நடந்த ஓர் அரிய சம்பவத்தைப் பார்ப் போம். சிறுபையனான நரேன் குறும்புக்காரன். பொதுவாகச் சிறுவர்களைக் கட்டுப்படுத்துவதற் காகப் பெரியோர்கள் பேய், பிசாசு என்றெல் லாம் அச்சுறுத்துவதுண்டு. நரேன் நெஞ்சுறுதியும் கூர்ந்த மதியும் கொண்டவன். நரேனும் அவனுடைய நண்பர்களும் மரத்திலேறிக் கிளைக்குக் கிளை தாவி முரட்டுத்தனமாக விளையாடுவது வழக்கம். குழந்தைகளின் கும்மாளத்தால் அலுத்துப் போன மரத்துச் சொந்தக்காரர், அவர்களை அச்சுறுத்தித் தம் தொல்லைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடிவு செய்தார். விளை யாட்டில் மூழ்கியிருந்த அவர்களிடம் சென்று 'இதோ பாருங்கள்! இந்த மரத்தில் பேய் ஒன்று குடியிருக்கிறது. நீங்கள் இந்த இடத்தை விட்டு ஓடி விடுங்கள். இல்லையென்றால் பேய் வந்து உங்களை அடித்துக் கொன்றுவிடும்'' என்று எச்சரித்தார். நரேனைத் தவிர மற்ற எல்லாச் சிறுவர்களும் நடுநடுங்கிப் போய் அங்கிருந்து நழுவத் தொடங்கிவிட்டனர். நரேன் மட்டும் நிலைகுலையாமல் கல்லுப் பிள்ளையார் போல் அப்படியே நின்றிருந்தான். பேய் பிசாசுகளை எண்ணி அஞ்சுவதற்கு மாறாக நரேனுக்குப் பேயைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம் கூடியது. அவன் முன்னரை விடத் தீராத விளையாட்டுப் பிள்ளையாய் மாறினான். மரக்கிளைகளில் தாவித் தாவி ஊஞ்சலாடி, பேய் வரும்! பேய் வரும்! என்று அதனைச் சந்திக்கத் தயாரானான்.

ஆனால், பேயோ குட்டிசாத்தானோ எதுவும் வரவில்லை. மரத்துச் சொந்தக்காரர் தங்களை அச்சுறுத்தி விரட்டியடிக்கவே அத்தகைய கதையைக் கட்டியிருக்கிறார்கள் என்பது நரேனுக்கு புரிந்தது. பின் தன் நண்பர்களையெல்லாம் கூட்டி அத்தகைய கட்டுக் கதையை ஒரு போதும் நம்பக்கூடாதென்று அறிவுறுத்தினான். இயல்பாகவே நரேன் அச்சமற்றவனாகவும், எதையும் துருவி ஆராயும் குணமுடையவனாகவும் இருந்தான். எதனைப் பற்றிய உண்மையும் கண்டறியும் எத்தகைய சோதனையையும் எதிர்கொள்ளும் நெஞ்சுறுதி அவனிடம் இருந்தது. அவரைப் போல் வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

**க.கிரேஷன், இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னப் பூஞ்சிட்டுக்கள்

## புதுமைகள் காத்த சிம்மாசனம்

முன்னொரு காலத்தில் அரவனூர் எனும் கிராமத்தில் ஒரு பிராமணன் தனது வயதான தாயுடன் வாழ்ந்து வந்தான். அவனை அனைவரும் அம்பி என அழைப்பர். ஏழைகளான அவர்களின் சொத்தாக ஒரு சிறிய வீடும், ஒரு சிறிய காணித்துண்டும் இருந்தன. அவர்கள் தமக்குத் தேவையான மரக்கறிகளைத் தமது தோட்டத்தில் விளைவித்துப் பெற்றுக் கொண்டனர்.

அம்பியின் தாயின் நீண்ட காலக் கனவாக இருந்தது, அம்பிக்கு ஒரு திருமணம் செய்து வைத்து மருமகளைத் தன்னுடன் வைத்துக் கொள்ள வேண்டுமென்பதாகும். அதனால் அவள் அம்பியிடம் "எப்போதுடா திருமணம் செய்வாய்? நான் எப்போது என் மருமகளைப் பார்ப்பது?" என அடிக்கடி நச்சரித்தாள்.

அம்பி தன் தாய் மீது அளவு கடந்த பாசம் வைத்திருந்தான். ஆனால், அவனிடம் திருமணம் செய்யப் பணம் இருக்கவில்லை.

அம்பி தன் நிலையை நினைத்து ஒவ்வொரு நாளும் வருந்தினான். கடைசியாக அம்பி பட்டணம் செல்லத் தீர்மானித்தான்.

ஒரு நாள் அம்பி தன் அம்மாவிடம் தான் பட்டணம் செல்லத் தீர்மானித்திருப்பதைக் கூறினான். "நான் பட்டணம் சென்று நிறையப் பணம் சம்பாதித்து, இங்கு வந்து திருமணம் செய்து கொள்கிறேன். பின் நாம் எந்த விதக் கஷ்டமும் இன்றி வாழலாம்" என்றான்.

அப்போது அம்பியின் தாய் "மகனே போகாதே! நாம் ஏழையாக இருந்தாலும் தாய் அருகில் மகன் இருப்பதுதான் நல்லது" எனக் கூறனாள்.

ஆனால் அம்பி தன் முடிவினை மாற்றிக் கொள்வதாக இல்லை. "அம்மா, உனக்கு ஒரு மருமகள் தேவையென்றால், நான் அவளைத் திருமணம் செய்ய என்னிடம் பணமில்லை. ஆதலால் அவளை நன்றாக வாழவைப்பது கடினம்" என அம்பி கூறினான்.

அம்பியின் குடிசை முற்றத்தில் நூறு ஆண்டு பழைமை மிக்க ஓர் ஆலமரம் ஓங்கி வளர்ந்திருந்தது. அம்மரத்தில் ஒரு பூதம் வாழ்ந்து வந்தது. அதன் பெயர் உருமாறிய பூதம். அது எவ்வாறு அம்பியின் இடத்தைப் பிடிக்கலாம் எனப் பலகாலமாகக் காத்துக் கொண்டு இருந்தது.

அம்பியினதும் அவனது அம்மாவினதும் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த பூதம் தனக்குத்தானே "இது நல்ல சந்தர்ப்பம். அம்பி வீட்டை விட்டுச் சென்றவுடன், நான் அவனைப் போல் உருமாறி, அவன் வீட்டில் தங்குவேன்" எனச் சொல்லிக் கொண்டது.



மறுநாள் காலை அம்பி பட்டணம் செல்லப் புறப்பட்டான். அவன் தாய் கண்ணீருடன் வாழ்த்துக் கூறி ஆசீர்வதித்து அனுப்பினாள். அம்பி பட்டணம் பயணமானான்.

நல்ல சந்தர்ப்பத்திற்காகக் காத்துக் கொண்டிருந்த பூதம் இரவு வேளை வந்தவுடன் அம்பியைப் போல் உருமாறி வீட்டுக் கதவைத் தட்டியது.

அம்பியின் தாய் இரவு வேளையில் யார் வந்திருக்கிறார்? என எண்ணிக் கொண்டே கதவைத் திறந்தாள். அங்கு அம்பியைப் போல் இருந்த உருமாறிய பூதத்தைக் கண்டாள்.



அம்பியின் தாய் ஆச்சரியத்துடன் "நீ பட்டணம் தானே செல்லப் புறப்பட்டாய், எப்படி இவ்வளவு சீக்கிரமாய் வந்தாய்? ஏதாவது சுகவீனமா?" எனப் பலவாறு கேள்விகளைக் கேட்டாள்.

அப்போது பூதம் "அப்படியொன்றும் இல்லையம்மா, உன்னை என்னால் விட்டுப் பிரிய மனம் வரவில்லை. நான் என் முடிவை மாற்றிக் கொண்டேன். நான் இனி எத்தனை துக்கம், கஷ்டம் வந்தாலும் உங்களை விட்டுப் பிரிய மாட்டேன்" எனக் கூறியது.

இவ்வார்த்தைகளைக் கேட்ட அம்பியின் தாய் தன் மகன் திரும்பி வந்த மகிழ்ச்சியில் அவனுக்கு விதவிதமான உணவு சமைத்தாள். அவள் தன் மகன் தன்னுடன் இருப்பதையே விரும்பினாள். தன் மகன் திரும்பி வந்ததினால் சாதாரண நாட்களைப் போலன்றி அம்பியை நன்கு உபசரித்தாள். பூதத்திற்கோ இது ஆலமரத்தை விட நன்றாக இருந்தது. இவ்வாறு அந்தப் பூதம் குடிசையில் அம்பியாக வாழத் தொடங்கியது.

ஒரு வருடம் கழிந்தது. அம்பியும் தன் தாயைப் பார்க்கப் பணத்துடனும் பல பொருட்களுடனும் ஊருக்கு வந்தான். வீட்டை அடைந்தவுடன் அம்பி ஆர்வத்துடன் கதவைத் தட்டினான். அங்கு அவனுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது.

(தொடரும்)

- எஸ். ஷர்மினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்

2006 மார்ச் 08 பு

# தீயணைப்புப் படை தீ

தீ மானிட வாழ்வோடு ஒன்றிணைந்து உற்ற நண்பனாகச் செயல்படுவது போன்று சில சந்தர்ப்பங்களில் மனிதனுக்கு எதிரியாக மாறி மிக மோசமான தீய விளைவுகளை உண்டு பண்ணுவதும் உண்டு. எமது கவனயீனம் காரணமாகவும், அறியாமை காரணமாகவும் தீயினால் பல அபாயங்கள் நிகழ்கின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்களில்; தீயின் கொடூரத்தில் இருந்து எம்மைப் பாதுகாப்பதற்காகத் தீயணைப்புப் படை இயங்குகிறது.

## தீயணைப்புப் படையணி

தீப்பற்றி மிக மோசமான விளைவுகள் நிகழ்வதைத் தடுப்பதற்காகத் தீயணைப்புப் படை நிறுவப்பட்டிருக்கிறது. மக்களையும் உடைமைகளையும் பாதுகாக்கும் பணியை அவர்கள் செய்கின்றனர்.

## தீயணைப்புப் படையின் இலச்சினை



எண்கோண நட்சத்திரச் சின்னம் உலகம் முழுவதும் உள்ள தீயணைப்புப் படைப்பிரிவின் பொது இலச்சினையாக இருந்து வருகின்றது. தீயணைப்புப் படை வீரர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய எட்டுக் குணாதிசயங்களை இந்த இலச்சினை குறிக்கின்றது. அவை யாவன.

1- தந்திரோபாயம், 2- வீராவேச உணர்வு,
3- அச்சமின்மை, 4- நட்புறவு,
5- திறமை (நிபுணத்துவம்)
6. உறுதிப்பாடு, 7. அவதானத்துடன் காரியமாற்றும் போக்கு,
8. அனுதாப உணர்வு.

**1** **தீ விபத்து ஏற்பட்டால்**

011-2422222, 2422223, 4222222. என்ற இலக்கங்களை அழைக்கலாம்.



இத் தொலைபேசி இலக்கங்களூடாகத் தகவல் வழங்கப்படும் போது, தீயணைப்புப் படைப்பிரிவின் கட்டுப்பாட்டு அறைக்குச் சென்றடையும் தகவல் மூலம் 30 செக்கன்களுக்குள் தீ பிடித்துள்ள இடம், முகவரி, தீயினால் ஏற்படப்போகும் பாதிப்பு பற்றிய தகவல்கள் சுருக்கமாகப் பதிவு செய்து கொள்ளப்படுகின்றன. உள்வருகின்ற அழைப்பு மூலம் (CLI) மீண்டும் கட்டுப்பாட்டு அறையில் இருந்து தகவல் வழங்கப்பட்ட இடத்தை உறுதிசெய்வார்கள்.

**2** அதனை அடுத்துத் தீ பற்றி அறிவிக்கும் சமிக்ஞை ஒலி (சைரன் ஓசை) எழுப்பப்பட்டுத் தீயணைப்புப் படையினர் உசார் படுத்தப்படுவர்.

**3** தீ பற்றிய தகவல் கிடைத்தவுடன் தீயணைப்புப் படையினர் இரும்புக் குழாயொன்றின் உதவியுடன் அவசரமாகக் கீழிறங்குவார்கள்.



**4** தீயணைக்கும் படைப் பிரிவொன்றில் எட்டுப் பேர் கொண்டதாக இரண்டு பிரிவினர் உடனடியாகத் தீயணைப்பதற்காக அனுப்பப்படுவர். அவர்களிடம் தீயில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் கவச உடை மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் என்பன காணப்படும்.

## உருவாக்கம்

1892இல் கொழும்பு கோட்டை ரெக்லமேசன் வீதியில் தீயணைப்பு சேவை நிலையம் முதலில் நிறுவப்பட்டது.

## இதன் சேவைகள்

* உயிர்களையும் உடைமைகளையும் காத்தல்
* பாரிய பொருளாதார நட்டத்தினைக் குறைத்தல்.

## தீயணைப்பு இயந்திரம்

தீயணைப்பு இயந்திரத்தில் (Fire engine) அல்லது அதற்குரிய வாகனத்தில் விஷேட பாதுப்புடனான நீர்த்தாங்கி, அதிவேகத்தில் நீரைப் பாய்ச்சும் குழாய் மற்றும் உபகரணங்கள் என்பன பொருத்தப்பட்டிருக்கும்.

இந்த வாகனத்துடன் நீர் நிரப்பப்பட்ட மற்றொரு கொள்கலன் (பௌசர்) வண்டியும் அதனோடு மூன்று தீயணைப்பு வீரர்களும் மேலதிகமாக அனுப்பப்படுவர்.

* அதனைத் தொடர்ந்
அனுப்பப்படுவர். தீயணை
ஏற்பாடுகளைச் செய்யும்ப
தேவையான முன்னேற்பா
மருத்துவமனைக்கும் தகவ
* கட்டு
தகவல்
பயன்ப
தகவல்



**முதலாவது குழு**

நிலையப் பொறுப்பதிகாரியுடன் (OIC) நான்கு வீரர்கள் முதற் கட்டமாகத் தீயணைக்கும் இடத்திற்கு விரைவார்கள். இவர்கள் பணிக்குத் தேவையான மேலதிகப் பணியாளர்களையும் சேர்த்துக் கொள்வார்கள். இந்த எண்ணிக்கை விபத்தின் தன்மையைப் பொறுத்து வேறுபடலாம்.

தீயணைப்புப் படைப்பிரிவிற்குப் பொறுப்பான அதிகாரி. OIC

தீப்பற்றாதபடி தீயிற்குள்ளால் நடமாடக் கூடிய வகையிலான உடை, அஸ்பெஸ்ரஸ் கவச உடை என்றழைக்கப்படும்.



படை வீரரின் உ...

...சீருடை

தீ விபத்தின் போது முதலில் அந்த இடத்திற்கு விரைபவர், தீயணைப்புப் படைப்பிரிவு பொறுப்பதிகாரியேயாகும். மிகவும் மோசமான நிலைமையைக் கொண்ட தீ விபத்தின் அன்றைய கடமைகளுக்குப் பொறுப்பான அதிகாரியும் (D,O) அந்த இடத்திற்கு விரைவார். கட்டுப்படுத்த முடியாதபடி தீ பரவுமாயின் தீயணைப்புச் சேவையின் பிரதம அதிகாரியும் (C.O) அங்கு விரைவார். அவர் தீயணைப்புப் படையினருக்குத் தீ பரவாதபடி இலகுவாக அணைப்பதற்கு ஏதுவாக ஆலோசனை வழங்குவார்.

## தீயணைக்கும் குழாய்



நகரிலும், பிரதான வீதிகளிலும் தீயணைப்புத் தேவைகளின் போது அவசரமாக நீரைப் பெற வசதியாக விஷேட நீர் நிரப்பும் குழாய் (Fire Hydrant) பொருத்தப்பட்டிருக்கும். தீயணைக்கும் குழாயையும் இந்த நீர் பெறும் குழாயையும் பொருத்தவென விஷேட உபகரணங்கள் உள்ளன.

தீயணைக்கும் படைப்பிரிவின் செயற்பாடுகள் பற்றி அறிய விரும்பும் பாடசாலை மாணவர்களுக்கு அதற்கான வாய்ப்பு வழங்கப்படும். பாடசாலை அதிபர் ஊடாக அதற்கான வேண்டுகோள் அனுப்பப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யை அணைப்பதெப்படி?

டர்ந்து தீப்பற்றியுள்ள இடத்திற்குத் தீயணைக்கும் படையினர் தீயணைப்பு வண்டியுடன் அவசர அவசரமாக ணைப்புத் திணைக்களத்தில் இருந்து படையினர் புறப்படுவதுடன் தீப்பற்றியுள்ள இடத்திற்கு உரிய பாதுகாப்பு யும்படி அயலில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு, பாதிப்புற்றவர்களுக்கு மருத்துவ சிகிச்சை ஏற்பாடுகளைக் கவனிக்கத் ஏற்பாடுகளைச் செய்யும்படி உரிய இடத்திற்கு அயலில் உள்ள மருத்துவமனைக்கும் தலை நகரின் தேசிய தகவல் வழங்கப்படும்.

கட்டுப்பாட்டு அறையில் இருந்து தீயணைக்கச் செல்லும் படையினருக்குத் தேவையான ரேடியோ கவல் பரிமாற்றங்கள் செய்யப்படும். தீயின் பாதிப்பு விவரங்கள், தீயணைப்புப் படையினர் பயணிக்கப் யன்படுத்த வேண்டிய பாதை, தீ அணைக்கும் இடத்தில் செயலாற்ற வேண்டிய விதம் தொடர்பான கவல்கள் அவர்களிடம் உள்ள தகவல் பரிமாற்றக் கருவி ஊடாக வழங்கப்பட்டுக் கொண்டே இருக்கும்.

* நகரில் தீ பற்றியிருந்தால் அதன் நிலைவரம் தொடர்பாகத் தீயணைப்புப் படைப்பிரிவின் கட்டுப்பாட்டு அறையில் இருந்து மாநகர ஆணையாளர் மற்றும் மாநகர முதல்வர் ஆகியோருக்கு உடனுக்குடன் தகவல்கள் வழங்கப்படும்.

**சிறிய தீயை அணைக்கும் உபகரணம்**

வீடுகளில் அல்லது அலுவலகங்களில் தீப்பற்றிக்கொண்டால் அதனை அணைப்பதற்காக இதுபோன்ற சிறிய உபகரணம் பொருத்தப்பட்டிருக்கும்.

அவசரத் தொலைபேசி





தீப்பற்றியுள்ள இடத்தைச் சென்றடைந்த அதிகாரி, பரவுகின்ற தீயின் தன்மையை முதலில் தெரிந்து கொண்டு அதற்கு ஏற்பவே அணைப்பதற்காகக் கையாளப்படுகின்ற தொழில்நுட்ப ஆலோசனையை வழங்குவார். தீ மேலும் பரவுமாயின் தேவையான மேலதிக நீர் இயந்திரங்கள், மேலதிகப் படை வீரர்களை அழைப்பதிலும் அந்தப் படைப்பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரி கருமமாற்றுவார்.

மாடிக்கட்டிடமாயின் தீயணைக்கும் வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள ஏணி மூலம் தீயணைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.



தீயணைப்புப் படைச் சேவைத் திணைக்களத்தின் பிரதம அதிகாரி ஜே.கன்னங்கர அவர்கள்.

**தீயணைப்புக்காகப் பயன்படுத்தப்படும் 4 வகை உபகரணங்கள்**

1. A தர உபகரணம். இது சிவப்பு நிறத்தினால் ஆனது. இதில் நீர் காணப்படுகின்றது.
2. B தர உபகரணம். இது நீல நிறத்தினால் ஆனது. இதில் தீயை அணைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தம் உள்ளது.
3. கறுப்பு நிறத்தினால் ஆனது. இதில் காபனீர் ஒக்சைட் உள்ளது. A தரத் தீ மற்றும் மின்சார ஒழுக்குக் காரணமாக ஏற்பட்ட தீயை அணைப்பதற்காக இவ்வகை உபகரணம் பயன்படுத்தப்படுகின்றது.
4. யானைத் தந்த நிறத்திலானது. இதிலும் இரசாயனப் பதார்த்தமே இருக்கின்றது. இரசாயனக் கலவைகள் மூலம் ஏற்படும் தீயை அணைக்க இந்த உபகரணம் பயன்படுத்தப்படுகின்றது.

## நான்கு வகையான தீ

1. **A** ரகமான தீ.
கனமான பொருட்கள் தீப்பற்றிக் கொள்வதைக் குறிக்கும். (உ+ம் : மரத்தளபாடம், காகிதம் முதலியன)
2. **B** ரகமான தீ.
திரவப் பொருட்களுக்குத் தீப்பற்றிக் கொள்வது. (உ+ம் : டின்னர், பெற்றோல் போன்ற எண்ணெய் வகை)
3. **C** ரகமான தீ.
வாயுப் பொருட்களில் தீப்பற்றிக் கொள்வது. (உ+ம் : எரிவாயு)
4. **D** ரகமான தீ.
உலோகப் பொருட்களுக்குத் தீப்பற்றிக் கொள்வது. (உ+ம் : அலுமினியம், மங்கனீசியம் போன்றன)

* தீயணைப்பதற்காகப் பொருத்தப்பட்டுள்ள குழாயின் நீளம் 14 மீற்றர்களாகும். மேலதிக நீளம் தேவைப்படுமாயின் மேலும் அதிசக்தி வாய்ந்த குழாய்கள் பொருத்தப்படும். அதன் மூலம் ஒரு செக்கனுக்கு 500 லீற்றர் அளவு நீர் பாய்ச்சப்படும். அவ்வாறு பாய்ச்சப்படுகின்ற நீரைக் கட்டுப்படுத்தவும் வசதிகள் உள்ளன.

* வீடுகளில் அல்லது அலுவலகங்களில் தீப்பற்றிக் கொண்டால் இவ்வாறு தீயணைப்பதற்காகச் சிறிய உபகரணங்கள் பொருத்தப்பட்டிருக்கும்.

- அமீர்.எச். -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கொட்லாந்து

ஸ்கொட்லாந்து பெரிய பிரித்தானியாவின் ஒரு பிரிவாகும். பெரிய பிரித்தானியா என்றழைக்கப்படும் நாடு மூன்று முக்கியமான பிரதேசங்களைக் கொண்டது. அவை இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்கொட்லாந்து என்பனவாகும். இவை பரப்பளவில் பெரிய நிலப்பிரதேசங்களையும் மற்றும்



பொருளாதாரத்திலும் வேறுபட்டுக் காணப்படுவதன் காரணமாகத் தனித்தனியாகப் பிரித்து நோக்க வேண்டியுள்ளது. இதன் காரணமாகப் பெரிய பிரித்தானியாவின் புள்ளி விபரங்கள் தகவல்கள் பலவற்றை நாம் தருகின்றோம்.

பெரிய பிரித்தானியாவின் வட பகுதியில் அமைந்துள்ள ஸ்கொட்லாந்து பிரித்தானியா நாட்டின் 1/3 பகுதியைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பரப்பளவில் மிகப் பெரிதாக இருப்பதன் காரணமாக இது ஒரு நாடாகவே செயற்பட்டு வருகின்றது. வடக்கு மற்றும் மேற்கே அத்திலாந்திக் கடலையும், கிழக்கில் வடகடலையும், தெற்கே இங்கிலாந்தையும் ஸ்கொட்லாந்து எல்லைகளாகக் கொண்டுள்ளது.

## தரைத்தோற்றம்

ஸ்கொட்லாந்து 78,790 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட இராச்சியமாகும். இதன் அருகாமையில் 186 சிறு தீவுகள் உள்ளன. மிக வளர்ச்சி கண்ட நீண்ட கடற்கரையோரங்களைக் கொண்டிருப்பதை ஸ்கொட்லாந்தின் ஒரு சிறப்பியல்பாகக் கூறலாம். முக்கியமாக மேற்குக் கடற்கரையோரங்களில் பல்வகைப்பட்ட தரைத்தோற்ற இயல்புகளைக் காணலாம். இதனால் ஆரம்ப காலமுதல் இயற்கைத் துறைமுகங்கள் பல நிரம்பப் பெற்ற இடமாக ஸ்கொட்லாந்து இருந்தது.

ஸ்கொட்லாந்து நாட்டில் அதிக மலைப் பிரதேசங்களைக் காணலாம். இம்மலைப் பிரதேசங்கள் மூன்று பகுதிகளாகப் பிரிந்து வடக்கிலிருந்து தெற்காகக் காணப்படுவதோடு உயர் நிலம், மத்திய



தாழ்நிலம், தென் உயர் நிலம் எனப் பிரிக்கப்படுகின்றது. நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 1/2 பங்கு உயர் நிலங்களாக உள்ளன. இதில் பல உயர் மலைகளைக் காணலாம். மேலும் மலைகளுக்கருகில் ஏரிகள், பள்ளத்தாக்குகள் என்பனவற்றையும் காணலாம். ஸ்கொட்லாந்தின் உயர்ந்த மலையாகப் பென்நெவிஸ் எனப்படும் மலை உள்ளது. 1343 மீற்றர் உயரமுடைய மலை உச்சி இதில் உள்ளது.

மத்திய தாழ் நிலங்கள் அதிக வளமான மண்ணைக் கொண்ட நிலங்களைக் கொண்டது. இங்கு பயிர்ச் செய்கை சிறப்பாக நடைபெறுகின்றது. பாரிய கைத்தொழிற்சாலைகளும் பெரிய நகரங்களும் இப்பகுதியிலேயே உள்ளன.

ஏரிகள், நதிகள் பலவற்றைக் கொண்ட நாடு ஸ்கொட்லாந்தாகும். இவற்றில் லொவ லொமொன்த், லாவ் னெஸ், லொவ் டெ ஆகிய ஏரிகள் ஸ்கொட்லாந்து நாட்டிலேயே உள்ளன. இவற்றைவிடக் குறைந்த



நீளத்தைக் கொண்ட பல நதிகளும் இப்பிரதேசத்தில் பாய்கின்றன.

## காலநிலை

பெரிய பிரித்தானியா மற்றும் அதனுடன் தொடர்புடைய பிரதேசங்களைச் சுற்றிக் கடல் காணப்படுவதன் காரணமாக மிதமான காலநிலை காணப்படுகின்றது. மிதமான வெப்பத்துடன் கூடிய குளிர் மற்றும்




குளிர் அதிகமுள்ள கோடை காலத்தையும் இங்கு காணலாம். மலைப் பிரதேசங்களுக்கருகில் உள்ள பிரதேசங்களில் அதிக குளிர் காணப்படுகின்றது. வெப்பநிலை குறைவாகவுள்ள ஜனவரி மாதத்தில் வெப்பநிலை 3 பாகை செல்சியஸாகக் காணப்படுகின்றது. ஜூலை மாதத்தில் 14 பாகை செல்சியஸிற்கும் 15 பாகை செல்சியஸிற்கும் இடையில் வெப்பநிலை உள்ளது. வருட மழை வீழ்ச்சி 3800 மில்லிமீற்றராக உள்ளது. ஆனால் மலைப் பிரதேசங்களில் மழைவீழ்ச்சி குறைவாகவே கிடைக்கின்றது.

## தாவரம்-விலங்குகள்



ஓக் மற்றும் தேவதாரு மரங்கள் ஸ்கொட்லாந்து நாட்டிற்கு உரிய மரங்களாக உள்ளன. இவற்றைவிடப் பீர், பைன் மற்றும் லாவ் எனும் மரங்களையும் இங்கு அதிகமாகக் காணலாம். ஆனால் இன்று அதிக மரங்களை நாம் காணமுடியாது. அதிக காடுகள் தென் மற்றும் கிழக்குப் பகுதி உயர்நிலங்களிலேயே காணப்படுகின்றன.

மான், ஓநாய், முயல் எனும் விலங்குகளை இங்கு அதிகமாகக் காணலாம். இவற்றைவிடக் கடற் பிரதேசங்களை அண்டிய பகுதிகளில் பறவைகள் பலவற்றைக் காணலாம். டொல்பின் மீன்களையும் இங்கு அதிகமாகக் காணலாம்.

## சனத்தொகை



பெரிய பிரித்தானியாவில் வாழும் இனங்களான பிக்டிஸ், செல்டிஸ், ஆங்லோ செக்சன் மற்றும் ஸ்கண்டிநேவியன் இன மக்கள் ஸ்கொட்டிலாந்திலும் வாழ்கின்றனர். ஸ்கொட்லாந்தில் வாழும் மக்களில் அதிகமானோர் நகரப் பகுதிகளிலேயே முக்கியமாக எடின்பரோ, கிளாஸ்கோ போன்ற நகர்களை அண்டியே வாழ்கின்றனர். இவர்களில் அதிகமானோர் புலம் பெயர்ந்து வந்தவர்களாகவே உள்ளனர்.

5,054,800 பேரை மொத்தச் சனத்தொகையாகக் கொண்ட ஸ்கொட்லாந்தின் சனத்தொகை அடர்த்தி கிலோமீற்றருக்கு 64 பேராக உள்ளது. பெரிய பிரித்தானியாவின் குறைந்த சனத்தொகை அடர்த்தி கொண்ட பிரதேசமாக ஸ்கொட்லாந்து உள்ளது.

ஸ்கொட்லாந்தின் மிகப் பெரிய நகராக 'க்ளாஸ் கோவ்' உள்ளது. இது பிரதான வர்த்தக நகராக உள்ளது. இதனைவிட அபர்டீன் மற்றும் டன்யூப் எனும் நகர்கள் பிரதான நகர்களாக உள்ளன.

(தொடரும்)

எஸ். கிறேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பினைக் கதை

# மழையும் நரி

காட்டில் நரியொன்று அவசர அவசரமாக எங்கோ சென்று கொண்டிருந்தது. செல்லும் வழியில் ஆங்காங்கே சந்தித்த தனது நண்பர்களுடனும் பேசிவிட்டுச் செல்ல அது மறக்கவில்லை. ஆனால் கர்வம் மிக்க இந்த நரியுடன் பேசுவதற்குச் சில மிருகங்கள் விரும்பவில்லை. அவை நரியைக் கண்டும் காணாதது போல் வேறு திசையில் ஒதுங்கிச் சென்றன. இப்படியே நரியார் காட்டின் வழியே சென்று கொண்டிருக்கையில் திடீரெனப் பலத்த காற்று வீசத் தொடங்கியது.

காட்டில் வெளிச்சமும் மங்கியது. இடிமின்னலுடன் 'சோ' என மழை பெய்யத் தொடங்கியது. நரிக்கோ என்ன செய்வதென்றே தெரியவில்லை. எவ்வாறு இந்த



மழையில் நனையாமல் பயணத்தைத் தொடருவது என அறியாமல் தட்டுத்தடுமாறியது. அவ்வேளை அப்பகுதியில் குரங்கொன்று மரப்பட்டைகளையும், கிளைகளையும் கொண்டு வீடொன்றைக் கட்டிக் கொண்டிருந்தது. மழை பெய்யத் தொடங்கியதால் அது அரைகுறையாகக் கட்டப்பட்டிருந்த அந்த வீட்டில் பதுங்கிக் கொண்டது.

அவ்வேளை மழையில் நனைந்து கொண்டிருந்த நரியாரைக் கண்ட குரங்கு நரியின் மீது இரக்கப்பட்டது. "நரியாரே வாரும். இந்தக் குடிசைக்குள் வந்து மழையில் நனையாமல் காத்துக் கொள்ளும்'' என்றது அது. கர்வம் மிக்க நரியோ குரங்கின் வீட்டிற்குள் செல்வது தனக்குக் கௌரவக் குறைச்சலானது என எண்ணிக் கொண்டது. பதில் கூறாமல் அப்படியே நின்றது. நிலைமையைப் புரிந்து கொண்ட குரங்கு தனது குடிசையின் கூரைப் பகுதியில் வேயப்பட்டிருந்த காய்ந்த மரக்கிளையொன்றைக் கழற்றி அதனை நரியிடம் கொண்டு போய்க் கொடுத்தது. இந்த மரக்கிளையைத் தலைக்குப் பிடித்தவாறு நனையாமல் செல்லுமாறும் மழைவிட்ட பின் அதனை மீண்டும் கொண்டு வந்து தருமாறும் குரங்கு கூறியதும் எப்படியும் மழையில் நனையக் கூடாதே என எண்ணிய கர்வமிகு நரி அந்த மரக்கிளையைக் குரங்கிடமிருந்து பெற்றுக் கொண்டு தலையில் பிடித்தவாறு நனையாமல் சென்றது.

இப்படியே நரியார் காட்டில் நடந்து செல்கையில் சிறிது நேரத்தில் மழை நின்றுவிட்டது. இனித் தேவை தீர்ந்து விட்டதுதானே என எண்ணிய நரி கையிலிருந்த அந்த மரக்கிளையைத் தூரத்தே எறிந்து விட்டுப் பயணத்தைத் தொடர்ந்தது. குரங்காருக்கு அந்த மரக்கிளையை மீண்டும் கொடுக்க வேண்டுமே என்று கூட அது யோசிக்கவில்லை.

தனது தேவைகளை முடித்து விட்டு மீண்டும் தனது இருப்பிடத்தை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தது நரி. அப்போது சிறிது தூரம்தான் அது சென்றிருக்கும்.... பழையபடி மீண்டும் 'அடைமழை' பெய்யத் தொடங்கிவிட்டது. நரியோ.... மீண்டும் நிலைதடுமாறிப் போனது. அப்போதுதான் அதற்குத் தான் விட்ட தவறு புரிந்தது. 'குரங்கார் கொடுத்த மரக்கிளை இனி அவசியப்படாது என வீணே வீசியெறிந்து விட்டோமே..... அது இருந்திருந்தால் மழையில் நனையாமல் தொடர்ந்து சென்றிருக்கலாம் அல்லவா?' என வருந்திக் கொண்டது. இனி என்ன செய்வது... மழைக்கு ஒதுங்கவும் இடமில்லை. ஒதுங்கினாலும் இரவாகிவிடும். செய்ய வழியில்லாத நிலையில் மழையில் நனைந்துக் கொண்டே சென்ற நரி.... மறுநாள் சுகவீனப்பட்டுப் பெரும் அவதிக்குள்ளாகியது. குரங்கார் கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்த மரக்கிளையைக் கையோடு திரும்பக் கொண்டு வந்திருந்தால் மழையில் நனைய வேண்டியும் வந்திருக்காது. இவ்வாறு சுகவீனப்படவும் நேர்ந்திருக்காது என்பதை உணர்ந்து மனம் நொந்தது.

**பிறர் செய்த உதவியை மறந்து உதாசீனப் போக்கில் நடந்தால், நாளடைவில் அதே உதவி மீண்டும் தேவைப்படும் சந்தர்ப்பம் கிட்டலாம். அப்போது அல்லல்படும் நிலையே தோன்றும்.**


அங்.இல : 565
எம்.ரி.எம்.தமீம், தரம் - 4, அல் மிஸ்பாஹ் மு.வி, கொஸ்வத்தை.


அங்.இல : 566
ஏ.ஜே.எப்.சம்றா, தரம் - 4, தி/ஜாயா வித்தியாலயம், மூதூர்.


அங்.இல : 567
தெ.மிகுந்தன், தரம் - 11C, யா/மீசாலை வீரசிங்கம் வித்., மீசாலை.


அங்.இல : 568
ஏ.ஏ.அப்துல் றஹ்மான், தரம் 7A, ஸாஹிரா கல்லூரி, தர்கா நகரம்.


அங்.இல : 569
க. மதீபன், தரம் - 12, மன்/சித்தி விநாயகர் இ.க, மன்னார்.


அங்.இல : 570
செ.தவரூபன், தரம் - 9, வவு/த.ம.ம.வி, வவுனியா.

விஜய் மாணவர் கழகம் விஜய் மாணவர் கழகம் விஜய் மாணவர் கழகம்


அங்.இல : 571
ச.லக்ன கீதா, தரம் - 12A, மடுல்சீமை த.ம.வி, மடுல்சீமை.


அங்.இல : 572
மோ.மிதிலராஜ், தரம் - 7C, கிளி/ம.வி, கிளிநொச்சி.


அங்.இல : 573
ந.சௌதாமினி, தரம் - 9, யா/[illegible], [illegible].


அங்.இல : 574
பூ.முகர்சன், தரம் - 9, மு/[illegible] வித்தி [illegible], முல்லைத்தீவு.


அங்.இல : 575
தி.கஜேந்திரா, தரம் - 7, யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.


அங்.இல : 576
யோ.ருத்திரன், தரம் - 10K, மட்/கு.வெளி சி.ச.ம.வி, களுவாஞ்சிக்குடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ආයුබෝවන් ஆயுபோவன் வணக்கம்
## பின்வரும் சொற்களின் உச்சரிப்பை அறிந்து கொள்ளுவோம்

### සරුංගලය - சறுங்மலய - பட்டம்

| சொற்கள் | | உச்சரிப்பு | பொருள் |
|---|---|---|---|
| උණ පතුරු | | පතුරු | மூங்கில்தடி |
| | | பதுறு | |
| | තු | பத்து = තු | |
| | | පතුරු | |
| සාදනවා | | සාදනවා | செய்வார்கள் |
| | | சாදனவா | |
| | ද | The = ද | |
| | | සාදනවා | |
| ලොකු | | ලොකු | பெரிய |
| | | லொகு | விசாலமான |
| | කු | கொக்கு = කු | |
| | | ලොකු | |
| වාගේ | | වාගේ | போல |
| | | வா ගේ | போன்ற |
| | ගේ | Gate = ගේ | |
| | | වාගේ | |

### பட்டம் பற்றிய சில வாக்கியங்கள்



1. ළමයි සරුංගල් අරින්න ආසයි
   ளமய் சரங்மல் அறின்ன ஆஸய்
   பிள்ளைகள் பட்டம் விட விரும்புவர்
2. උණ පතුරු වලින් සරුංගල් සාදනවා
   உண பதுறுவலின் சறுங்மல் சாදனவா
   மூங்கில் தடியால் பட்டங்கள் செய்வார்கள்
3. පාට පාට සව්කොළවලින් සරුංගල් සාදනවා
   பாට பாට சவ்கொளவலின் சறுங்மல் சாදனவா
   பல நிறக் கடதாசியால் பட்டங்கள் செய்வார்கள்
4. ලොකු සහ කුඩා සරුංගල් සාදනවා
   லொகு சஹ குடா சறுங்மல் சாදனவா
   பெரிய சிறிய பட்டங்கள் செய்வார்கள்
5. මොණරු වාගේ සරුංගල් සාදනවා
   மொணரு வாගේ சறுங்மள் சாදனவா
   மயில் போன்ற பட்டங்கள் செய்வர்
6. සරුංගල් අහසේ පාවෙන විට හරි ලස්සනයි
   சறுங்மள் அஹஸேபாவென விடஹறி லஸ்ஸனய்
   பட்டங்கள் ஆகாயத்தில் பறக்கும்போது அழகாக இருக்கும்
7. ළමයි මුහුදු වෙරළේ සරුංගල් අරිනවා
   ளமய் முகுදු வெறளே சறுங்மள் அறினவா
   பிள்ளைகள் கடற்கரையில் பட்டங்கள் விடுவார்கள்

### කියවීම - வாசிப்பு



| ස | ச |
|---|---|

| ස | රුං | | ග | ල | ය |
|---|---|---|---|---|---|
| ச | று | ங் | ம | ஹ | ய |

ළමයි සරුංගල් අරින්න ආසයි
ளமய் சறுங்கள் அறின்ன ஆஸய்

### අභ්‍යාසය பயிற்சி
கீறிட்ட இடங்களை நிரப்புங்கள்

උදා:-
___රුංගලය
සරුංගලය

1 ස___ංගලය
2. සරු___ගලය
3. සරුං___ලය
4. සරුංග___ය
5. සරුංගල___
6. ළමයි______අරින්න ආසයි.









விஜய்யில் வெளிவரும் அனைத்து விடயங்களும் சிறுவர்களுக்கு மட்டுமல்ல பெரியவர்களுக்கும் பிரயோசனமானவை. கடந்த 18 ஆம் திகதி விஜய்யில் வெளியான 'ஸ்பைடர் மேனை விட ஆற்றல் மிக்க சிலந்திகள்' என்ற ஆக்கம் மிக மிக அருமை.

எம்.ஆர்.றிஸ்பாஸைனப், மூதூர்-01

நாங்கள் இருவரும் விஜய் வாசகிகள். நாம் அனுப்பிய ஆக்கங்கள் இன்னும் விஜய்யில் பிரசுரிக்கப்படவில்லை. இனியேனும் எங்கள் ஆக்கங்களை பிரசுரிக்க மாட்டீர்களா?



எம்.எஸ்.எப்.சப்னா,
எம்.ஜெ.எப்.ஜெஸ்மினா.

தரமான ஆக்கங்கள் நிச்சயமாக பிரசுரமாகுமென்று ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். பொறுத்திருந்து பாருங்கள். தொடர்ந்தும் எழுதுங்கள். (ஆ-ர்)

ஒவ்வொரு புதன்கிழமையும் பாடசாலை மாணவர்களுக்கென மிகவும் பயனுள்ள விடயங்களைக் கொண்டு வருகிறது விஜய்.



எம்.கே.எப்.மம்சுமா,
முருதகஹமுல.

விஜய்யில் வெளிவரும் அறிவுக்கு விருந்தளிக்கும் சகல விடயங்களும் சகலருக்கும் பயனுடையவை. இதில் சித்திரக்கலை சம்பந்தமான விடயங்களையும் பிரசுரித்தால் மிக மிகப் பயனுடையதாக இருக்கும்.

எம்.எப்.எப்.நஸீலா, காலி.



உங்கள் ஆலோசனை படிப்படியாகச் செயற்படுத்தப்படும். (ஆ-ர்)

பாடசாலைச் சிறார்களுக்கு அறிவூட்டும் விடயங்களை அள்ளித்தரும் விஜய்க்கு நன்றி.

கே.தேவராஜ், மாத்தளை.

விஜய்யில் வெளிவரும் அனைத்து அம்சங்களும் என்னை மிகவும் கவர்ந்துள்ளன.



எஸ்.மெடோனா,
பொகவந்தலாவ.

விஜய் பத்திரிகை வாசிப்பதனால் நாங்கள் பல நன்மைகளை அடைகிறோம்.

வி.பிரதீஸ், மானிப்பாய்.

விஜய் பத்திரிகையே! என்றும் உன் பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

அ.ரஜிந்தா, வவுனியா

விஜய்யே! வாரா வாரம் நீ சுமந்து வரும் விடயங்கள் எல்லாம் எனக்கு மிகவும் பிடிக்கும். நீ சுமந்து வரும் விடயங்கள் எமது கல்விக்கு மிகவும் பயனுடையவை.



எம்.என்.எப்.ரிஸ்மியா,
மல்வானை.

விஜய் வந்ததே
எங்கள் அறிவுக் கண்ணும் திறந்ததே
வாழ்வில் என்றும் சிறந்திட
துணை புரிய வந்ததே

பாத்திமா நுஸ்ரத் நவாஸ், தர்கா நகர்.

விஜய் பத்திரிகையில் வெளிவரும் வரலாற்றுத் தகவல்கள் மற்றும் இலக்கியப் பகுதிகள் மாணவர்களுக்குப் பயனுள்ளதாக உள்ளன.

வீரமுத்து விஜயா, அப்புத்தளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்

அற்லஸ்




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்குச் சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாகச் சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

# ஆட்சிக் கவிழ்ப்புச் சதி!

பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதி குளோரியா அரோயோவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்குச் சதி செய்தார்கள் எனக் கூறி அந்நாட்டின் இடதுசாரிகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நாடாளுமன்றத்திலேயே சிறை வைக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டனர். இச்சம்பவம் பெப்ரவரி



28 ஆம் திகதி நடைபெற்றது.

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குச் சதி நடக்கின்றதென்ற நம்பகரமான தகவல்கள் கிடைக்கப் பெற்றமையால் ஜனாதிபதி குளோரியா அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தினார். இதனையடுத்தே பொலிஸார் 6 நாடாளுமன்ற உறுப்பினர்களையும், மேலும் அரசியல்வாதிகள் 10 பேரையும் கைது செய்தனர்.

முன்னதாக அரசாங்கத்திற்கு எதிராக நடத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் இந்த அரசியல்வாதிகளே முக்கிய பங்கினை வகித்தனர் எனவும் கூறப்படுகின்றது.

2004 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது முறைகேடான வழியில் ஜனாதிபதி குளோரியா வெற்றி பெற்றார் எனக்கூறிக் கடந்த வருடம் நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டிருந்த போதிலும் அதிலும் அவர் வெற்றி பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தற்போது அவர் அவசரகால நிலையை அமுல்படுத்தியிருப்பது சட்டவிரோதமானது என 'டெயிலி டிரிபியுன்' என்ற பத்திரிகை வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

ஆனால் அரசியலமைப்பின்படி தனக்கிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தியே அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியிருப்பதாக ஜனாதிபதி குளோரியா தெரிவித்துள்ளார்.

# பாகீஸ்தானிலும் பறவைக் காய்ச்சல்!

பாகிஸ்தானிலும் பறவைக் காய்ச்சல் பரவியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இரண்டு கோழி வளர்ப்புப் பண்ணைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் படி அங்கு காணப்பட்ட கோழிகள் சிலவற்றிற்கு "H5N1" என்ற பறவைக் காய்ச்சல் பீடித்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்த இரண்டு கோழி வளர்ப்புப் பண்ணைகளையும் பாகிஸ்தான் பொலிஸார் இழுத்துப் பூட்டியுள்ளனர். ஒருவகை விஷவாயுவை இந்தப் பண்ணைக்குள் செலுத்தி அங்கிருந்த 25,000 கோழிகளைக் கொன்றுவிட்டனர்.

ஆப்கானிஸ்தான் எல்லையைச் சார்ந்த பாகிஸ்தான் பகுதியிலேயே இவ்வாறு பறவைக் காய்ச்சல் பரவி யுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளது. குறித்த கோழிகளிலிருந்து எடுக்கப்பட்ட குருதி இங்கிலாந்திற்குப் பரிசோதனைக்கென அனுப்பப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை, குறித்த கோழிப் பண்ணைகளில் கடமையாற்றிய ஊழியர்கள் வெளியேற முடியாதவாறு பொலிஸார் சுற்றிவரக் காவல் காத்து வருகின்றனர். இந்தச் செய்தி பரவத் தொடங்கியதிலிருந்து பாகிஸ்தானிலும் கோழி, முட்டை விற்பனை மட்டுமன்றி முட்டையினால் தயாரிக்கப்படும் சிற்றுண்டி வகைகளின் விற்பனையும் வீழ்ச்சியடைத் தொடங்கியுள்ளதாம்.



# உள்நாட்டு கலவரம்!



ஈராக்கில் ஷியா முஸ்லிம்களுக்கும், சுன்னி முஸ்லிம்களுக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டதில் அது பாரிய உள்நாட்டுக் கலவரமாக மாறக்கூடிய நிலையைத் தோற்றுவித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த பெப்ரவரி 22 ஆம் திகதியன்று ஈராக்கின் சமரா நகரிலுள்ள ஷியா முஸ்லிம்களின் புனிதத்திற்குரிய இடமான மசூதியொன்றின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலையடுத்தே மேற்படி கலவர நிலை அங்கு ஏற்பட்டது. தாக்கப்பட்ட இந்த மசூதியானது ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்தது எனக் கருதப்படுகின்றது.

இவ்வாறு தமது மசூதி தாக்கப்பட்டதில் ஆத்திரமுற்ற ஷியா முஸ்லிம்கள் சுன்னி முஸ்லிம்கள் மீதும் அவர்களின் மசூதிகளின் மீதும் பதில் தாக்குதலில் இறங்கினர்.

இச்சம்பவத்தில் 140 பேர் கொல்லப்பட்டனர். இந்த நிலைவரம் தணிவதற்கிடையில் இரண்டாவதாக ஷியாக்களின் மற்றுமொரு மசூதியும் தாக்கப்பட்டதில் இரண்டு பேர் காயமாகினர்.

'பஸ்ரா' நகரிலுள்ள அல்-அமீர் என்ற மசூதியின் மீதே இந்த இரண்டாவது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

எனவே, நிலைமை மேலும் உக்கிரமடைந்ததையடுத்து ஷியா மற்றும் சுன்னி முஸ்லிம்களின் மதத் தலைவர்கள் அவசர அவசரமாக ஒன்றுகூடி நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கான பேச்சுக்களை மேற்கொண்டிருந்தனர்.

# வங்கிக்கொள்ளை

**பொலிஸாரைப் போன்று வேடம் பூண்ட ஆயுததாரிகள் சிலர் லண்டன் நகரில் பாரிய வங்கிக் கொள்ளையொன்றை நிகழ்த்தியுள்ளனர். 2.5 கோடி பவுண்கள் இவ்வாறு கொள்ளையிடப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.**

**வங்கியின் முகாமையாளர் லண்டன் நகரின் வழியே வாகனத்தில் பயணித்துக் கொண்டிருக்கையில், ஆயுதபாணிகள் சிலர் இவரது வாகனத்தை இடைமறித்துள்ளனர். ஆயுதபாணிகள் பொலிஸ் சீருடையில் இருந்தமையால் அவர்கள் பொலிஸாராக இருக்கும் என நம்பிய முகாமையாளர் அவர்களுடன் ஒத்துழைத்துள்ளார். அவர்கள் தமது வாகனத்தில் ஏறுமாறு இவரைப் பணித்துக் கடத்திச் சென்றுள்ளனர். இதே சமயம் மேற்படி முகாமையாளரின் வீட்டிற்குச் சென்ற மற்றுமொரு குழுவினர்..... அவரது மனைவியையும், மகனையும் கடத்தியுள்ளனர். தமது விருப்பத்திற்கு எதிர்மாறாக நடந்தால் குடும்பத்தவர்கள் கொல்லப்படுவர் என முகாமையாளரை இவர்கள் பயமுறுத்தியதன் காரணத்தினால் முகாமையாளர் செய்வதறியாது இருக்க, கொள்ளையர்கள் வங்கியிலிருந்த பணத்தை [illegible] சென்றுள்ளனர்.**

## அற்லஸ் கேள்வி - 38

**கேள்வி: ஈராக்கில் இரண்டாவதாகத் தாக்கப்பட்ட மசூதியின் பெயர் என்ன?**

சரியான விடை :..........................................

உங்கள் விடையுடன்– பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 38,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 36 இன் சரியான விடை :- 5**

**பரிசு பெறுவோர்**

சிவா மனோஜ்காந்த், தரம் - 9B,
இராகலை தமிழ் ம.வி, இராகலை.

எஃப்.ருஷ்தா, தரம் - 9A,
உடுநுவர பாத்திமா முஸ்லிம் ம.வி, முருதகஹமுல்ல.

என்.சரவணன், தரம் - 10, மன்/அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, தலைமன்னார், மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மர்ம தேசத்தில்...


சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தென்னிந்தியாவின் சோழ சாம்ராஜ்யம் இலங்கையிலும் பரவியிருந்தது. கி.பி 993 ஆம் ஆண்டு ராஜராஜசோழன் காலத்தில் அனுராதபுர இராஜ்யம் வீழ்ச்சியடைந்திருந்தது. சோழ மன்னர்கள் பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு முழு இலங்கையையும் ஆட்சி செய்தனர்.

இராச ரட்டை என்ற வட மாகாணம் மும்முடிச் சோழ மண்டலம் என்று பெயரிடப்பட்டது. பொலன்னறுவைக்குச் சனநாதமங்கம் என்று பெயர் சூட்டியிருந்தது. தமிழும் சைவமும் செழித்தோங்கின. பொலன்னறுவை என்ற சனநாத மங்கத்தில் அமைக்கப்பட்டிருந்த சிவன் கோயிலின் காண்டா மணியின் நாதம் அப்பகுதி விகாரைகளில் இருந்து ஒலித்த மணி நாதங்களை விட மேலெழுந்து ஒலித்தது.

இலங்கையில் சோழர் ஆட்சி சுமார் 80 வருடங்கள் மட்டுமே நீடித்தது. தென்னிந்திய கலை கலாசாரம், மதம் மொழிச் செல்வாக்குப் பெரிதும் அதிகரித்தது. எனினும், சோழப் பேரரசின் ஆட்சியில் இருந்து இலங்கையை விடுவிக்க உள்நாட்டில் பல விடுதலை எழுச்சிப் போராட்டங்கள் இடம் பெற்ற வண்ணம் இருந்தன. இறுதியில் விஜயபாகு மன்னன் சோழருக்கு எதிராக யுத்தம் செய்து சோழர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தான்.

விஜயபாகுவின் படைத் தளபதியாக இருந்தவன் நாகன் என்ற தமிழ் மறவன் ஆவான். இவன் சிறுவயது முதலே நன்கு படைக்களப் பயிற்சி பெற்று நிறைந்த வீரதீர பராக்கிரமம் கொண்ட அஞ்சா நெஞ்சனாக இருந்தான். பில்லிசூனியம், மாயமந்திரம், பேய்பிசாசு வித்தைகள் நிறைந்திருந்த அக்காலத்தில் இவற்றுக்கெல்லாம் பயப்படாமல் நள்ளிரவிலும் பிசாசெனச் சஞ்சரிக்கும் எமகிங்கரனாக நாகன் மக்களால் மதிக்கப்பட்டான்.

விஜயபாகுவின் படைத் தளபதி நாகன் சிறுவயது முதலே நன்கு படைக்களப் பயிற்சி பெற்று நிறைந்த வீரதீர பராக்கிரமம் கொண்ட அஞ்சா நெஞ்சனாக இருந்தான். பில்லிசூனியம், மாயமந்திரம், பேய்பிசாசு வித்தைகள் நிறைந்த அக்காலத்தில் இவற்றுக்கெல்லாம் பயப்படாமல் நள்ளிரவிலும் பிசாசெனச் சஞ்சரிக்கும் எமகிங்கரனாக மதிக்கப்பட்டான்.



எனினும், அவன் தமிழ்ச் சைவ மரபினனாக இருந்ததாலும், சிவனை முழுமுதற் கடவுளாக ஏற்று வழிபட்டதாலும், விஜயபாகு மன்னனின் அரசாட்சியில் உரிய மதிப்பும் மரியாதையும் பதவியும் இவனுக்கு வழங்கப்படவில்லை. இதனால் அவன் துறவறம் பூண்டு, காவியுடை தரித்து நாடெங்கும் சென்று மக்கள் சேவை ஆற்றி வரலானான். அக்காலத்தில் எந்நேரத்திலும், எங்கும் செல்லவும், மக்களுக்கு ஏதும் பிரச்சினைகள், சண்டை சச்சரவுகள் முதலானவற்றில் தலையிட்டுத் தீர்த்து வைக்கும் செயல்களில் துறவிகள் சுதந்திரமாக ஈடுபட்டிருந்தனர். இரவில் கள்வர்-வழிபறி, கொலை, கொள்ளை என்பவற்றில் ஈடுபடுவதும் அதிகமாக இருந்தது. இத்தகைய இடங்களிலெல்லாம் நாகன் மின்னலெனத் தோன்றி மக்களின் எந்தப் பிரச்சினையையும் தீர்த்து வைப்பான். இப்படிக் காடு கரம்பையெல்லாம் அலைந்து திரிவது அவனுக்கு வழக்கமாகிப் போய்விட்டது.

அவன் தோற்றத்தில் துறவியாக இருந்தாலும் காவியுடை தரித்த ஒரு கடும் போர் வீரனாகவே இருந்தான். எந்த ஒரு சிக்கலான பயங்கரமான பிரச்சினையாக இருந்தாலும் நொடியில் வெல்லும் திறன் அவனுக்கிருந்தது.

இருள், பசி,பட்டினி, வெயில்,பனி, மழை, காற்று, பிசாசு,பேய், பூதம் எதுவாக இருந்தாலும் பாறை மீது முட்டிய பனியாக அவை அவனைக் கண்டால் விலகிப் போய்விடும். நாகன் பல நாடு நகரங்களுக்கெல்லாம் சென்று வந்தவன். தனது எல்லையற்ற பயணத்தின் போது, ஒருமுறை அவன் கிழக்குக் கரைநோக்கி அடர்ந்த காடுகளைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. நீண்ட வழிப் பயணத்தின் பின் இரவானதும் எங்கே தங்கலாம் என்று யோசித்தான். கண்ணுக்கெட்டிய தூரம் வரை மனித நடமாட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, அன்றிரவை வானத்து நட்சத்திரங்களின் ஒளியின் கீழ் புற்றரையில் கழிப்பதெனத் தீர்மானித்தான். புற்றரை அவனுக்குப் பஞ்சு மெத்தையாகவே தோன்றியது. அவன் தன்னிடமிருந்த ஒரேயொரு காவித்துண்டைத் தரையில் விரித்து உறங்கத் தயாரானான். அப்போது.......

(தொடரும்.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிளான் ஸ்ரீலங்கா நிறுவன இயக்குனர் மர்னா இவோரா

பேராசிரியர் ஜே.பி.திசாநாயக்க உரை நிகழ்த்துகையில்....

விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தின் இயக்குனர் சுஜான் விஜயவர்தன நாட்குறிப்பேட்டை வழங்குகிறார்.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடமிருந்து கண்டி லூல்கந்தர தமிழ் வித்தியாலய மாணவன் கே.செல்வராஜ் நாட் குறிப்பேட்டைப் பெறுகின்றார்.

# நாட்குறிப்பேடு வெளியீட்டு விழாவில்



பிளான் ஸ்ரீ லங்கா நிறுவனம், விஜய நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனம், தேசிய கல்வி நிறுவனம் ஆகியவற்றின் ஒன்றிணைந்த செயற்திட்டமான இளம் பிள்ளைகளுக்கான நாட்குறிப்பேட்டின் சம்பிரதாயபூர்வ வெளியீட்டு விழா அண்மையில் கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டப கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மேற்படி விழாவில் சிறப்பு அதிதிகளாகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, சிறுவர் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சுமேதா ஜயசிங்ஹ, பிளான் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் இலங்கைக்கான இயக்குனர் மர்னா இவோரா, தேசிய கல்வி நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி பேராசிரியர் ஜகத் விக்ரமசிங்ஹ, பேராசிரியர் ஜே.பி.திசாநாயக்க, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தின் இயக்குனர் சுஜான் விஜேவர்தன, விஜய நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தின் பொது முகாமையாளரும், இயக்குனருமான லால் ஜயவர்தன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவின் போது பிளான் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் அனுசரணையில் நமது சகோதரப் பத்திரிகையான 'விஜய' பத்திரிகையை இலவசமாகப் பெறும் மாணவ, மாணவியர்க்கு மேற்படி நாட்குறிப்பேடுகள் சம்பிரதாயபூர்வமாக வழங்கப்பட்டன.



பேராசிரியர் ஜகத் விக்ரமசிங்ஹ.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தின் பொது முகாமையாளரும், இயக்குனருமான லால் விஜேவர்தன.

அமைச்சர் சுமேதா ஜயசிங்ஹ உரை நிகழ்த்துகையில்...

மூத்த எழுத்தாளர் கருணா பெரேரா.

'விஜய்' பிரதம ஆசிரியர் இரா.சடகோபன்.


வெளிவந்துவிட்டது..!!!

தமிழ் சஞ்சிகை உலகில் புதிய பிரவேசம்




இலங்கையின் ஒரேயொரு மாதாந்த தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

தமிழ் PCTIMES
தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

2006 மார்ச் முதல் மாதாந்தம் வெளிவருகிறது.

**இலங்கையின் சகல பாகங்களிலும் கிடைக்கும் !**

புதிய

- தகவல்கள்
- செய்திகள்
- மென்பொருள் (SoftWare)
- வன்பொருள் (HardWare)
- செய்முறைகள்
- செயற்பாடுகள்

இன்னும் பல சுவையான அம்சங்களுடன்...

wijeyanewspapers

விஜய் பதிப்பகத்தாரின் மற்றுமோர் வெளியீடு.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பங்களாதேஷ்-இலங்கை அணிகளுக்கிடையே நடைபெற்ற 3 கிரிக்கெட் போட்டிகளைக் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரை இலங்கை அணி கைப்பற்றிக் கொண்ட போதிலும் இத்தொடரின் இரண்டாவது போட்டியில் பங்களாதேஷ் அணி 4 விக்கெட்களினால் வெற்றியீட்டியமையானது இலங்கைக்கு ஓர் அதிர்ச்சி வைத்தியமாகவும், பங்களாதேஷ் அணிக்கும் அதன் இரசிகர்களுக்கும் இன்ப அதிர்ச்சியாகவும் இருந்திருக்கும் என்றே கருதலாம். காரணம், பங்களாதேஷ், சிம்பாப்வே, கென்யா போன்ற அணிகள் பலவீனமான அணிகள் என்றவோர் கருத்தினைச் சிலர் பரப்பி வந்த ஒரு நிலையில் பங்களாதேஷ் அணியானது இத்தகைய வெற்றியைப் பெற்றமையானது நல்லதோர் பதிலடியாகவே அமைந்து விட்டது.




இதுவரை இலங்கைக்கும் பங்களாதேஷிற்குமிடையே மொத்தமாக 16 ஒருநாள் போட்டிகள் நடைபெற்றுள்ள நிலையில் இதில் 15 போட்டிகளில் இலங்கை அணிதான் வெற்றியீட்டியுள்ளது.

பங்களாதேஷைப் பொறுத்த வரையில் உலக நாடுகளுடன் இதுவரை 117 ஒருநாள் போட்டிகளில் போட்டியிட்டுள்ள அதேவேளை, இதில் 11 போட்டிகளில் வெற்றி பெற்றிருக்கிறது. இவ்வெற்றிகளுள் பாகிஸ்தான், இந்தியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளையும் வெற்றிக் கொண்டிருந்தமையும் சிறப்பம்சமாகும்.

# வட்மோருக்கே வெற்றி!



இலங்கைக்கு எதிராகப் போட்டியொன்றில் பங்களாதேஷ் இம்முறை வெற்றியீட்டியுள்ளமையானது, அந்த அணியின் பயிற்றுனரான வட்மோருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதெனலாம்.

ஒரு காலத்தில் இலங்கை அணிக்குப் பயிற்றுனராக இவர் இருந்தபோதுதான் இலங்கை அணி உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்டிருந்தது. எனினும், நாளடைவில் அதிருப்திக்குரிய நிலையிலேயே அவர் இலங்கையிலிருந்து வெளியேறினார். இத்தகைய பின்னணியில் அதே இலங்கை அணிக்கு உரிய பதிலடியைக் கொடுத்து விட்டோம் என்ற திருப்தி வட்மோருக்கு நிச்சயம் இருக்கும்.

# அக்தாரின் எதிர்காலம்



பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஷொஹெப் அக்தாரின் கிரிக்கெட் எதிர்காலம் கேள்விக் குறியாகியிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முழங்காலில் ஏற்பட்டுள்ள உபாதையின் காரணமாகவே அவருக்கு இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தான் அணியின் சார்பாகப் புயல் வேகத்தில் பந்து வீசி எதிர் அணியினரைத் திக்குமுக்காடச் செய்வதில் வல்லவர் அக்தார். இதனால்தான் இவரை "ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ்" என அடைமொழியிட்டு அழைக்கின்றனர்.

இத்தகைய வேகப்பந்து வீச்சாளர் இன்று உபாதையின் காரணமாக முடங்கிப் போயுள்ளமை பாகிஸ்தான் கிரிக்கெட் அணியையும், பாகிஸ்தான் இரசிகர்களையும் கவலை கொள்ளச் செய்துள்ளது.

அக்தாரின் முழங்காலில் ஏற்பட்டுள்ள இந்த உபாதையானது பாரதூரமானதாக இருப்பதாக மருத்துவ அறிக்கைகள் தெரிவித்துள்ளன. நாளுக்கு நாள் இதன் பாதிப்பு அதிகரித்து வருவதாகவும் தெரிய வந்துள்ளதையடுத்து இதற்கான மேலதிகச் சிகிச்சைகளைப் பெறும் பொருட்டு அக்தார் அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

ஆரம்பத்தில் மேற்படி உபாதையின் காரணத்தினாலேயே இந்தியாவுடனான போட்டியில் அக்தாரினால் கலந்து கொள்ள முடியாமல் போனது. இதன் தொடர்ச்சியாகவே தற்போது இலங்கையுடனான போட்டித் தொடரிலும் அவரால் கலந்து கொள்ள முடியாமல் போயுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை வீரர்களுக்கு 10 இலட்சம் பிணை

அவுஸ்திரேலியாவின் 'மெல்போர்ன்' நகரில் மார்ச் 15 ஆம் திகதி 18 ஆவது பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளமை நாம் அறிந்ததே.

இப்போட்டிகளில் கலந்து கொள்ளச் செல்கின்ற இலங்கை அணியின் வீரர்கள், அதிகாரிகள் ஆகியோர் ஆளுக்குத் தலா 10 இலட்சம் ரூபாவைப் பிணைப் பணமாகச் செலுத்த வேண்டும் என இலங்கையிலுள்ள அவுஸ்திரேலியத் தூதரகம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக இலங்கையின் தேசிய ஒலிம்பிக் சங்கத்திற்கும், விளையாட்டுத்துறை அமைச்சருக்கும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கென வெளிநாடுகளுக்குச் செல்கின்ற இலங்கையர்கள் பலர், குறித்த வெளிநாடுகளில் வைத்துத் தலைமறைவாகி வருகின்றமை பெருகி வருகின்றது. எனவே, இதனைத் தடுக்கும் பொருட்டே அவுஸ்திரேலியா முன்னேற்பாட்டு நடவடிக்கையாக இதனை மேற்கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதன்படி இலங்கை அணியின் வீரர்கள் அதிகாரிகள் ஆகியோரின் சார்பாக அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள், மேற்படி பிணைப் பணத்திற்குக் கையொப்பமிட வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு செய்வதன் மூலம் குறித்த வீரரோ அதிகாரியோ போட்டி முடிந்ததும் மீண்டும் இலங்கைக்குத் திரும்புவார் என்பதற்கு இவர்களே பொறுப்பாளிகளாக்கப்படுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இம்முறை பொதுநலவாய நாடுகளின் போட்டிக்கு இலங்கையின் சார்பாக 72 வீர, வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளனர். இவர்களுடன் 24 அதிகாரிகளும் உடன் செல்கின்றனர்.

மெய்வல்லுனர், பெட்மின்டன், குத்துச்சண்டை, ஜிம்னாஸ்ரிக், றகர், நீச்சல், ஸ்கொஷ், குறிபார்த்துச் சுடுதல், மேசைப்பந்து, எடை தூக்குதல் ஆகிய போட்டிகளில் இலங்கை வீரர்கள் கலந்து கொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இல்ல விளையாட்டுப் போட்டிகள்



கொழும்பு-14, மகாவத்தை புனித அந்தோனியார் தமிழ் மகா வித்தியாலயத்தில் அண்மையில் இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகளின் போது கொறட்டி, மேரி, தெரேசா ஆகிய இல்லங்களைச் சேர்ந்த மாணவர்கள் போட்டிகளில் ஈடுபட்டனர். போட்டிகளின் ஆரம்ப நிகழ்வாக அதிபர் அருட்சகோதரி எம்.பவளராணி அவர்கள் பேண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்படுவதையும், இல்ல மாணவர்களின் அணிவகுப்பினையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில், 'சமாதானத்திற்கான மக்கள் குரல்' எனும் நிகழ்வு அண்மையில் கொழும்பு விஹாரமகாதேவி பூங்காவின் திறந்த வெளியரங்கில் நடைபெற்றபோது, அவிசாவளை, கலனிவெலி சமாதான இணைப்புக் குழு மாணவிகள் வழங்கிய நடனத்தின் ஒரு தோற்றத்தைக் காண்கிறீர்கள்.

படம்-எஸ்.அப்துல் கரீம்

## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



கல்வி, ஒழுக்கம், சேமிப்பு ஆகியவற்றில் சிறந்து விளங்கும் மாணவர்களைத் தெரிவுசெய்து வருடந்தோறும் பரிசில் வழங்கி வருகின்ற தலை மன்னார் 'பியர்' சிறுவர் ஒன்றியத்திடமிருந்து 'செல்வராஜா டினோஷன்' என்ற மாணவன், 2005 ஆம் ஆண்டுக்கான தங்கப் பதக்கத்தைப் பெறுகிறார்.

## சிநேகம் கொண்டு வாழ்வோம்



சிறுவர் நாங்கள்
மண்ணில்
சேர்ந்து மகிழ்ந்து
கூடுவோம்
குறும்புகள் பலவும் செய்தே
குலவி இன்பம்
காணுவோம்!

ஓடிப் பிடித்துக் கெந்தி
ஒன்றாய்க் கூடி
ஆடுவோம்
தேடித் திரிந்து நல்ல
பழக்கம் தன்னைக்
கொள்வோம்!

அம்மா, அப்பா, ஆசான்
அவர்களைப் பணிந்து
கொள்வோம்
எம்மை நன்று வழிநடத்தும்
அவர்கள் சொல்லைக்
கேட்போம்!


எண்ணும் எழுத்தும்
கற்போம்
அதனை மனதில்
கொள்வோம்
சண்டை செய்து பிரியாமல்
சிநேகம் கொண்டு
வாழ்வோம்!



அரியாலையூர்
சி.சிவதாசன்



எம்.என்.எம்.நிஸ்வான், தரம் - $9^{A}$,
ஜெய்லான் தே.பாடசாலை,
பலாங்கொடை.



எம்.ஆர்.எம்.பைசல், தரம் - $9^{B}$,
க/மதீனா தே.பாடசாலை,
மடவளை பஸார்.




ஆதிலா உம்மா, தரம் - 7,
ஸாஹிரா தே.பாடசாலை,
மாவனல்ல.



எஸ்.எப்.சூபா, தரம் - $9^{B}$,
வெலம்பொடை மு.ம.வி,
வடதெனிய.



எம். என்.எப்.நப்லா, தரம் - $7^{D}$,
மாத்/அறபா தே.பாடசாலை,
மாத்தறை.



எம்.ஸமீர் அக்ரம், தரம் - $8^{A}$,
சேர் ராஸிக் பரீட் மு.வி,
கொழும்பு 15



எம்.இஸட்.எப்.ஸினாயா,
தரம் - 6,
மா/ஸாஹிரா மு.வி,
வெலிபிட்டிய.



எஸ்.எஸ்.எப்.ஹப்ஸா, தரம் - $2^{C}$,
அல்-முபாரக் தே.பாடசாலை, மல்வானை.




கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 குறுக்கெழுத்துப் போட்டி இல.53

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | த் | 2 | | | |
| | | | | | 3 அ |
| 4 | 5 | | 6 | | |
| | 7 | | | | |
| 8 | | | ச | | ரி |
| | | | | | |

### மேலிருந்து கீழ்

1. பாடல் பாடும் போது இது பிசகாமல் இருப்பது நல்லது என்பர்.
2. முக்கோணம் என்றும் சொல்லலாம்.
3. ஒலி, ஒளி பரப்புகளில் ஒரு செக்கனுக்கு அனுப்பப் படும் மின்காந்த அலைகளின் தொடர்.
5. இந்தோனேசியாவின் நாணய அலகு.
6. தஞ்சம் (குழம்பி)
8. அநேகமான தாவரங்கள் இதிலிருந்தே முளைக் கின்றன.

### இடமிருந்து வலம்

1. ஆணி அடிக்கப் பயன்படும் கருவியொன்று.
4. இலங்கையின் இயற்கைத் துறைமுகம் இங்குள்ளது.
7. உயிரற்ற மனித உடலை இப்படியும் அழைப்பதுண்டு.
8. கட்டுரை (குழம்பி)

குறுக்கெழுத்துப் போட்டி -53
"விஜய்" த.பெ.எண். 2037 கொழும்பு

### போட்டி. இல - 51இன் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 தி | ரி | 2 பி | 3 ட | 4 க | ம் |
| ம் | | 5 றை | க | வை | |
| 6 பு | 7 வி | | 8 ம | க் | 9 கா |
| | 10 ம் | ப | ஸ் | கொ | ல |
| | ம | | 11 கா | ம் | க |
| 12 நை | ல் | | ர் | பு | தி |

**பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்**

எம்.ஜே.எச். மும்தாஜ், தரம் - 10,
ஹ/ கிரிந்தை முஸ்லிம் ம.வி., கிரிந்தை.

ரி.அரவிந்த், தரம் - 8,
வெஸ்லி கல்லூரி, கொழும்பு - 9.

எஸ். பிருந்தா, தரம் - 10A,
நு/வ/டலோஸ் த.ம.வி., உடப்புஸ்ஸல்லாவ.

பெயர் :- ..................................................

நிரந்தர முகவரி:- ..........................................

..................................................

பாடசாலை, தரம், முகவரி :- ..............................

..................................................

நகரம்: ..................... மாவட்டம்:.....................

## அறிவுக்கு விருந்து - 39 விடைகள்

**போட்டி : 01**
அ. 1/4, 1/2, 3/4, 1, 1.25, 1.5, 1.75
ஆ. 1. 25, 1.5, 1.75, 2, 2.25, 2.5
இ. 1, 4, 9, 16, 25, 36, 49
ஈ. 24869, 48692, 86924, 69248, 92486, 24869
உ. 70538, 83507, 35078, 07835, 07835, 70538.
எ. 84, 72, 48, 36, 12, 0

**போட்டி : 02**
வேலி - Fence
பூ - Flower
கோழி - Fowl
புகை - Fume.
தவளை - Frog
இறகு - Feather
நெருப்பு - Fire

**போட்டி : 03**
1. பிழை 2. சரி 3. சரி
4. பிழை 5. பிழை 6. சரி

**போட்டி : 04**
✱ 8 கால்கள் உள்ளன.




1, 2, 3, 4 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் உறையிலும் 5ம் இலக்க குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடையை தபால் அட்டையிலும் ஒட்டி கீழுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து 2006.03.15ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 42**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## 1

பின்வரும் விளையாட்டுக்களைக் குறிக்கும் தமிழ், ஆங்கிலப் பெயர்களை உரிய புள்ளிக் கோட்டில் எழுதுக.
(வலைப்பந்து, கால்பந்து, கூடைப்பந்து, ஹொக்கி, கொல்ஃப், பட்மின்டன், டென்னிஸ் -
Volleyball, Football, Basketball, Hockey, Golf, Badminton, Tennis)






.............. .............. .............. ..............

.............. .............. .............. ..............






.............. .............. .............. ..............

.............. .............. .............. ..............

## 2

**அடுத்து வர வேண்டிய இரண்டு இலக்கங்களின் கீழ்க் கோடிடுக.**

அ. 50, 2, 48,4, 46, 6, 44, ........ , ..........
✱ 8, 46 ✱ 42, 8 ✱ 8, 42 ✱ 44,8

ஆ. 3, 4, 3, 5, 3, 6, 3, 7, 3, ........ , .........
✱ 9, 3 ✱ 3, 8 ✱ 8, 4 ✱ 8, 3

இ. 60, 53, 59, 51, 58, 49, 57, 47, ..... , .....
✱ 56, 45 ✱ 55, 45 ✱ 54, 40 ✱ 60, 42


ஈ. 3, 25, 4, 24, 6, 22, 9, 19, 13, ...... , ......
✱ 9, 18 ✱ 11, 16 ✱ 17, 16 ✱ 15, 18

உ. 2, 18, 4, 36, 6, 54, 7, 63, 8, 72, ..... , .....
✱ 81, 9 ✱ 10, 90 ✱ 9, 81 ✱ 8, 81

## 3 பூர்த்தி செய்க

1. மருந்தோமற்று ஊனோம்பும் வாழ்க்கை ..................................
..................................................
2. .................................................. ஆபத்தில் அறியலாம்.
3. ஆனைப் பசிக்கு..................................................
4. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார் ..........................
5. மூத்தோர் சொல் ..................................................
6. ஊக்கமது ..................................................

## 4



**இவர்கள் இருவரும் செல்ல வேண்டிய வழிகளை இருவேறு வர்ணங்களால் வேறுபடுத்திக் காட்டுங்கள்.**

### அற்லஸ் அறிவுக்கு விருந்து - 39 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி : 01 | போட்டி : 02 | போட்டி : 03 | போட்டி : 04 | போட்டி : 05 (குறு.போட்டி-51) |
|---|---|---|---|---|
| பா.பஹீமா தரம் -5, மகளிர் ம.வித்., குறிஞ்சாக்கேணி. | எல்.அக்தார், தரம் - 2B, அறபா வித்தியாலயம், ஏறாவூர். | லோஜினி மகாலிங்கம், தரம் - 8S வின்சன்ற் மகளிர் உ./த.பா., மட்டக்களப்பு. | எம்.பர்சாத், தரம் - 5B, ரஹுமானியா மு.ம.வித்., வெளிப்பன்னை. | அருட்செல்வி கிருபைராசா, தரம் - 5D வ/விபுலாநந்தா கல்லூரி, பண்டாரிக்குளம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சமுத்திராதேவியின் முடிவு

## வரலாற்றிலிருந்து..

எழுதுபவர் : திலகன்
சித்திரம் : அபயன்

**1** தியவன்னா ஓயா என்றும் எப்போதும் இல்லாதவாறு அன்று கரைபுரண்டு வேகமாக ஓடியது. பயங்கரமான சுழியுடன் நீர் சுற்றியது. நீர்ச் சுழி சுற்றிய இடத்தை வைத்த கண்வாங்காமல் பார்த்துக் கொண்டே இருந்தான் வீதிய பண்டார. கடும் யோசனையில் இருந்ததோடு அவன் மனதில் வெறுப்பை ஏற்படுத்திய அந்நிகழ்வை நினைத்து நினைத்து வேதனைப்பட்டான். திரும்பவும் தன் பார்வையைச் சமுத்திராதேவி மீது திருப்பினான். அவளோ திரும்பத் திரும்பச் சுற்றிக் கொண்டிருந்த அந்த நீர்ச்சுழியையே பார்த்துப் பார்த்து மகிழ்ந்திருந்தாள். பின்பு இளவரசனைப் பார்த்துப் புன்னகை பூத்தாள்.

**2** வீதிய பண்டார இளவரசன் இளவரசியை அருகில் வருமாறு அழைக்க, அவள் புன்னகை தவழும் முகத்துடன் அவனருகில் வந்து இளவரசன் முகத்தைப் பார்த்தாள். அப்போது இளவரசனின் முகத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டதை உணர்ந்தாள். கண்கள் சிவந்திருந்தன. கோபத்தால் அவன் தேகம் நடுங்கியது. ''ஏன்? இளவரசரே என்ன நடந்தது?'' என மெல்ல இளவரசி அவனிடம் கேட்டாள். ''துரதிர்ஷ்டப் பெண்ணே! நான் உன்னிடம் என் உயிரினும் மேலாக அன்பு வைத்தேன். இதனால் தான் ஜய பண்டாரவுடன் என் உயிரைப் பணயம் வைத்துச் சண்டையிட்டேன்'' என்றான்.

**3** ''உன்னால் தான் நான் அவ்விதமான தரங்குறைந்த செயலில் ஈடுபட்டேன். உன் பரம்பரையின் கௌரவம் இப்போது இல்லாமல் போய்விட்டது. அது மட்டுமன்றி, என் கீர்த்தி மிக்க பெயருக்கு இழுக்கும் ஏற்பட்டு விட்டது. இத்தகைய அபகீர்த்தயான நிலையிலிருந்து மீள வேண்டுமாயின் நீ உன் உயிரைத் தியாகம் செய்தாக வேண்டும். இன்னும் சிறிது நேரத்தில் உன் உடல் நீர்ச் சுழியுடன் சுற்றும் '' எனக் கோபத்துடன் கூறிக் கொண்டே சென்றான்.


**4** இதைக் கேட்ட இளவரசி சமுத்திராதேவி அழுது புலம்பினாள். ''நான் நிரபராதி. என் உயிரை வேண்டுமானால் பலியாக எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று அவன் காலடியில் அழுது வணங்கினாள். ஆனால் இளவரசனோ மௌனமாக அவள் முகத்தைப் பார்த்தான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. திரும்பவும் தன் குரலை உயர்த்தினான்.

**5** ''இளவரசியே! நீ நிரபராதியாக இருக்கலாம். ஆனால் உன்னால் ஊரெல்லாம் பரவியிருக்கும் கட்டுக் கதைக்கு எல்லையில்லை. நீ உயிருடன் இருக்கும் வரை இக்கட்டுக் கதைகள் ஓயாது. இவை யாவும் உண்மையாக இருக்கலாம் அல்லது பொய்யாக இருக்கலாம். நான் எடுத்த முடிவைச் செயற்படுத்தப் போகிறேன்'' எனத் தழுதழுத்த குரலில் கூறிச் சமுத்திராதேவியின் கழுத்தைப் பிடித்துத் தியவன்னா ஓயாவில் தள்ளிவிட்டான். அவள் மரண ஓலம் எழுப்பியபோதும் அவன் கல் மனது கரையவில்லை.

**6** மரணத்தின் பிடியிலிருந்து தப்ப அவள் முயற்சி செய்தபோதும் அவளால் முடியவில்லை. அன்று, கோட்டே இராசதானியிலிருந்த அழகிய இளவரசி நீர்ச் சுழியில் அகப்பட்டு விட்டாள். அவள் அதிலிருந்து தப்ப முயன்ற போதும் அவளால் முடியாமல் போனது. அவள் படும் வேதனையை இளவரசன் கண்களில் நீர் மல்கப் பார்த்துக் கொண்டிருந்தானே தவிர வேறொன்றும் செய்யவில்லை.

**7** இறுதி முடிவு நெருங்கியது. நீர்ச்சுழியில் சிக்கிய அவள் உடல், நீரின் கீழே சென்றது. நீண்ட நேரமாகியும் அவளது உடல் மேலெழுந்து வரவில்லை. கல்லாக வைத்த கண் வாங்காது தியவன்னா ஓயாவைப் பார்த்துக் கொண்டிருந்த வீதிய பண்டார நீண்ட நேரத்தின் பின் மெல்ல மெல்லப் பின்வாங்கினான். பல நாட்கள் தனிமையில் வாழ்ந்தான். வேதனையால் துடித்தான். சமுத்திராதேவியின் குணம் மற்றும் அழகை நினைத்து நினைத்துத் துக்கத்தில் ஆழ்ந்தான்.

**8** தனிமையில் அவளை நினைத்து அழுதான். சமுத்திராதேவிக்கு ஏற்பட்ட முடிவு பற்றிய செய்தி கோட்டே இராசதானி எங்கும் பரவியது. மக்கள் வேதனைப்பட்டனர். அரச மாளிகையிலும் பதற்றம் நிலவியது.

(தொடரும்.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, [illegible] 2006 மார்ச் மாதம் 08ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on March 08. 2006